பயிற்சி

* வெல்டிங்
* வயரிங்
* மோட்டார் மெக்கானிசம் (செய்முறை அறிமுறையுடன்)

புதிய பயிற்சி வகுப்புக்கள் [24-7-82] ஆரம்பம்.

அனுபவமான ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் நடைபெறும்

C. E. T.
ஐலண்ட் இன்ஸ்ரிரியூட்
[விகாரைக்கு எதிரில்]
58, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 3915

விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஆடி 2 றம்ழான் 26 இதழ் 155
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 18—7—82

உங்கள் வீடுகளை மலிவாகவும் விரைவாகவும் கட்ட விரும்புகிறீர்களா?

நேரிலோ, தபால் மூலமோ உடன் எம்முடன் தொடர்புகொள்க;

சர்வ வியாபார பொறியியல் ஒப்பந்த வேலைஸ்தாபனம்

Engineering Contracts and Syndicate Business Establishment

50, மகாத்மா வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
(மேலும் விபரம் பக்கம் இரண்டில்)
3901

வடபகுதி இரு ஆலயங்களுக்கு

# ஜனாதிபதி நிதியிலிருந்து
# 2 லட்சம் ரூபா நிதி உதவி

சுவர்ணமுகி யாழ் வருகிறார்



(8-ம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சி முதல்வரின் கோரிக்கையின் பலன்

(ஏ. வி. மாணிக்கம்)

வடபகுதியில் சரித்திரப் பிரசித்தி பெற்ற இரு ஆலயங்களுக்கு ஜனாதிபதி நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாவை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன வழங்கியுள்ளார். மாவை ஆலயத்திற்கு ஒரு லட்சம் ரூபாவும் கீரிமலைக்கு ஒரு லட்சம் ரூபாவும், கிடைத்துள்ளது

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கும், கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு இந் நிதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாலயங்களில் திருப்பணி வேலைகளுக்கே இந்நிதி கொடுக்கப்பட்டது.

எதிர்க்கட்சி முதல்வரும் காங்கேசன்துறை எம். பி.யுமான திரு அ அமிர்தலிங்கம் ஜனாதிபதியைச்சந்தித்து இந்த நிதி உதவிபற்றிக் கேட்டிருந்தார். (மா)

"பண்டாரவன்னியனை

## அரசு உரியமுறையில் கௌரவிக்கவில்லை"

--'அமிர்'

(வவனியா

"தமிழ் மக்களின் அரசியல், வரலாறு, மொழி, மதம் எல்லாமே இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்படும் சூழ்நிலையில் மாவீரன் பண்டாரவன்னியனின் பெருமையை உரிய முறையில் ஆட்சியாளர்கள் கௌரவிக்கவில்லை''.

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ அமிர்தலிங்கம், வவனியாவில் தந்தை செல்வா அரங்கில் நடைபெற்ற முத்தமிழ் விழாவிற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- "பண்டாரவன்னியன் வழியில்

(8-ம் பக்கம் பார்க்க)

"மொறிஸியஸ் தீவில்

## தமிழ் மக்கள் வாழ்ந்தும் தமிழ் மொழி அழிகின்றது"

### வவனியா முத்தமிழ் விழாவில் தமிழக சபாநாயகர் உரை

(நமது நிருபர் விவேகராசா)

"தமிழ் உணர்வுகளைக்கட்டிகாப்பது இளைஞர்களின் கடமையாகும், மொறிசியஸ் தீவில் தமிழ்பேசும் மக்கள்பலர் வாழ்ந்து வந்த போதும் தமிழ் மொழி அங்குஅழிந்துமறைந்து போகின்றது''.

தமிழக சட்டமன்றசபாநாயகர் திரு. கே. இராசாராம் வவனியா நகரசபை மைதான பண்டாரவன்னியன் அரங்கில் நடைபெற்ற முத்தமிழ் கலை விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் தலைமையில் இடம்பெற்ற இவ் விழாவில் திரு. இராசாராம வேலும்பேசுகையில் கூறியதாவது:-

"தமிழகத்தில் எந்த அளவிற்கு வீரபாண்டிய கட்டபொம்மன் வெள்ளையரை எதிர்த்துப் போராடித் தன் உயிரைத் தியாகம் செய்தானோ அதைப்போலவே இலங்கை வன்னிநாட்டில் சுதந்திரம் இன்றேல் இல்லை வாழ்வு என்ற கோஷத்தை முன்வைத்துத் தன் இறுதி மூச்சுவரை போராடியவன் மாவீரன் பண்டார வன்னியன்

"வாளை மட்டும் பயன்படுத்தித் தனது வீரத்திறனை எடுத்துக் காட்டியுள்ளான்.

இந்த வன்னிக்குப் பல்வேறு பெயர்கள் உண்டு. ஆனாலும தனிச் சிறப்பும் இருக்கின்றது. இலங்கை மண்ணில் பல சிற்றரசர்கள் பண்டார வன்னியனுக்கு முன்பு அந்நியருக்கு அடிபணிந்துள்ளார்கள்.

#### நிரந்தர நினைவுச்சின்னம்

"நிரந்தர நினைவுச்சின்னம் யாருமே இவனுக்கு எழுப்ப முற்படவில்லை. ஆனால் கற்சிலை

[8-ம் பக்கம் பார்க்க]

## அலங்கார ஊர்திப் பேரணி; கண்கொள்ளாக் காட்சி

[வவுனியா]

வன்னிப் பிரதேசத்தின் சுதந்திரத்தை கட்டிக் காத்த மாவீரன் பண்டாரவன்னியன் சிலை திறப்பு விழா தொடர்பாக நேற்று இடம் பெற்ற அலங்கார ஊர்திப் பேரணி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

கச்சேரி முன்றலில் இருந்து ஆரம்பமாகி இந்த ஊர்திபவனி மைதானம் சென்றடைய பல மணித்தியாலம் நீடித்தது. கடை வீதி வழியாக நாதஸ்வரம் ஒலிக்க பாடசாலை மாணவ மாணவிகள் அணிவகுத்து முன்செல்ல திட்டமிட்டபடி கம்பர், வள்ளுவன், இளங்கோ, ஔவை, பாரதி, பாரதிதாசன் போன்ற புலவர்களின் உருவப் படங்களும் ஏட்டுச்சுவடிகளும் தாங்கிய அலங்கார ஊர்தி பவனி இடம் பெற்றது.

கடைவீதியின் ஐந்து பிரதான இடங்களில் பல்வேறு முகப்புகளிலும் அமைக்கப் பட்டிருந்து அலங்காரப்பந்தல்கள் அனைவரினது கவனத்தையும் ஈர்த்தன.

சங்கம் வளர்த்த மதுரை மாநகர் உலகத் தமிழராய்ச்சி மாநாட்டில்போது எவ்வகையில் சிறப்புற்று விளங்கியதோ அதே போன்று வன்னி வள நாட்டின் சுதந்திரத்தை கட்டிக் காத்த மாவீரன் பண்டாரவன்னியன் சிலை திறப்பு விழாவும் அமைந்தது என

[8-ம் பக்கம் பார்க்க]

இவ் ஆண்டிற்கான இறுதிப் பிரிவு

O/L
DAY CLASS

யூனிவேர்சல்

கந்தர்மடம் சந்தி-யாழ்.

துரித மீட்டல் வகுப்பு

ஜங்கரநேசன்

ஜுலை 19

காலை 8.30 முதல்

ஃ பரீட்சைக்கு முன்னதாக நடாத்தப்படும் விசேட வகுப்புகளில் எமது நிறுவன மாணவர் மாத்திரமே இம் முறை அனுமதிக்கப் படுவர்.

[3916]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோவிலாக்கண்டி மத்தியில் 32 பரப்பு நெற்காணி விற்பனைக்குண்டு. பகுதிபகுதியாகவும் கொடுக்கப்படும். கந்தையா கதிரவாசன், அரச வீதி, உரும்பராய் கிழக்கு. 3911

நல்லின அல்ஷேசன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: சேவியர். ஆறுகால்மடம், சங்கக் கடைக்கு அருகாமையில், ஆனைக்கோட்டை. 3906

சாவகச்சேரி சிவன்கோவிலடியில் 2 பரப்புக்காணி கிணற்றுடனும், 3பரப்புக்காணி வீட்டுடனும் விற்பனைக்குண்டு. [பஸ், சந்தை,புகையிரத நிலையம் அண்மையில்]. சு. நல்லம்மா, சிவன்கோவிலடி, சாவகச்சேரி. 3907

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் மாம்பழம்சந்திக்கு அருகாமையில் வீடுகட்டுவதற்குரிய காணி 2¾ பரப்பு விற்பனைக்கு உண்டு. த. தாமோதரம்பிள்ளை, இல. 6, பாரதி வீதி. சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 3908

மிருசுவில் வடக்கு ரேட்டில் புகையிரத நிலையத்திலிருந்து 1000யார் தூரத்தில், 16பரப்பு காணி நல்ல சுற்றுடலுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: R. யோசப், பொலிஸ் நிலையம், தலைமன்னார். 3905

மினி வானுக்குரிய ஆசனங்கள், பழைய மாடல் வீட்டு செற்றி செட்டுகளும் விற்பனைக்குண்டு. சி. எஸ். கே. மில், யாழ்ப்பாணம். 3892

புதிய C-70 ஹொண்டா மோட்டார்சைக்கிள்விற்பனைக்குண்டு. ஆறுயிரம் கிலோ மீட்டர் பாவிக்கப்பட்டுள்ளது. இன்று பார்வையிடலாம். டாக்டர் டி. இராமதாஸ், முன் ஒழுங்கை, திருநெல்வேலி. தொலைபேசி; 8090 (3909)

அல்சேசன் நாய்க்குட்டி (2மாதம்) விற்பனைக்குண்டு. எஸ். அகிலானந்தன், மிருகவைத்திய அதிகாரி, இராசதோட்டு ஒழுங்கை, கண்டி ரேட், சாவகச்சேரி. 3869

'பியர்'அதன் முழுச் சுவையுடன்.
லயன் லாகர்




ரூபா 15/75

## விற்பனைக்கு

பெரியகடை, யாழ். பெரியாஸ்பத்திரி, பெரியபாடசாலைகளுக்கு மிக அருகில், 19, கடைச்சாமிவீதியில், 2 பரப்புக்காணிக்கு மேல் உடன் விற்பனைக்குண்டு. இரு பக்கமும் புதிய சுற்றுமதில். 3903

பரந்தன் பிரதான வீதியில் தபால் அலுவலகத்திற்கு அருகாமையில் ¾ ஏக்கர் காணி உண்டு. கடைகள், தியேட்டர் கட்ட உகந்தது. இராஜகதிரவேல், 168, உருத்திரபுரம். 3895

3ஸ்ரீ வோக்ஸ்வகன் (Volkswagon) கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: 6, சுவாட்ஸ் ஒழுங்கை, சுண்டிக்குளி, யழ்ப்பாணம். போன்; 8002. (3876)

ஊரெழு பலாலி பிரதான வீதியில் 7 பரப்பு புதியகிணற்றுடன் கூடியவிவசாயக்காணி, வீடுகள் தொழிற்சாலைஅமைப்பதற்கு நல்ல சுற்றாடலில் பிள்ளையார் கோவிலுக்குச் சமீபமாக உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். தருமலிங்கம் தருமதுரை, ஊரெழு கிழக்கு, சுண்ணாகம். 3899

வைத்தியரின் பிரத்தியேக பாவனைக்குரிய 8 ஸ்ரீ மொரிஸ் ஒக்ஸ்போட் கார் விற்பனைக்குண்டு. 21,அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (18, 19ம் திகதிகளில் தொடர்பு கொள்ளவும்). 3882

நல்ல நிலையிலுள்ள ஒரே பாவிப்பிலிருந்த Datsun Sunny 6ஸ்ரீ ஆறுயிரம்தொடர் இலக்க கார் விற்பனைக்குண்டு டில்கா பேணிச்சர்பலஸ், 234, 236, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8186. (3878)

நஷனல் -கலர்- ரெலிவிஷன்-18'' (Duty - Free-Shop Price) தீர்வை இல்லாக் கடை விலைக்கு விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்க. M. G. M. Cycle Work, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம். 3890

நாவற்குளி உணவுக்களஞ்சியத்திற்குப் பின்புறமாகவும், நாவற்குளி புகையிரத நிலையத்திலிருந்து 100யார் தொலைவில் கண்டிவீதியிலே, பேரூந்துநிலையத்திற்கு அருகாமையிலும், கண்டி வீதியை பாதையாகவும் கொண்ட நான்கு ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்குண்டு, விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும். L.V. சிங்கராயர், 464, பிரதான வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். தொ. பே. 8192. (3898)

84-02-24வரை உத்தரவாதமான புதிய 14'' சோனி பலவர்ண தொலைக்காட்சிப் பெட்டி Belling Cooker, Mobyllette Mop d சைக்கிள் முதலில்வரும் ஆகக்கூடியவிலை கூறுபவருக்கு உடனே விற்கப்படும். 67, செட்டித்தெரு, நல்லூர். 3866

மன்னாரில் சின்னக்கடை ஆஸ்பத்திரி வீதியில் உள்ள 17½பேர்ச்சஸ் (Perches) காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: திருமதிR. செபஸ்ரியாம்பிள்ளை, 156, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 3879

## விற்பனைக்கு

காணி - சுன்னாகத்தில் காங்கேசன்துறை வீதியிலுள்ள ஜெயம் ரியூட்டரி எதிரொழுங்கையில் வீடு கட்டக்கூடிய 5 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு திருமதி சிவகுமாரன், குட்டியாண்டிவளவு, ஜயனார் வீதி, சுன்னாகம் 3914

304, 9 ஸ்ரீ 35 மைல்/கலன் பேர்ஜோ கார் விற்பனைக்குண்டு. ரூ. 45,000/- டாக்டரின் சொந்தப் பாவிப்பிலுள்ளது. தொடர்பு: G V. பாலசிங்கம், ''ராணிஸ்தான்''. அச்சுவேலி. (3850

இயக்கச்சிச் சந்திக்கண்மையில் வீடு, கிணற்றுடன் கூடிய 20 பரப்புதென்னங் காணியும், 5 ஏக்கர் நெல் வயலும் (தனியாக) உண்டு. காணி பிரதான வீதிக்கண்மையில். உடன் தொடர்பு கொள்க. ப.பொன்னுத்துரை, 2-ம் குறுக்குத் தெரு, கடற்தொழிற் பயிற்சி நிலையம், யாழ்ப்பாணம். (கிழமை நாட்களில் மட்டும்) 3827

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் பல்கலைக்கழகச் சந்திக்கும் திருநெல்வேலிச்சந்திக்குமிடையில் புதிய கிணறு, சுற்றுமதில்களுடன் கூடிய இரண்டரைப் பரப்பு வெற்றுக்காணி முழுதாகவோ பகுதியாகவோ விற்பனைக்குண்டு. தொடர்பு: சேனாதிராஜா, கட்டிடஒப்பந்தகாரர், 5ம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 3886

வெளிநாட்டு விற்பனையில் முன்னணி வகிக்கும் ''ஸ்ருவட்ஸ்தேயிலை'' பலரகங்களில் விற்பனைக்குண்டு. மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும், ஸ்ரீ முருகன் ஏஜென்ஸி, 115/1/1A. கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 3849

## தேவை

புதிதாக தொடங்கவிருக்கும் தையல் தொழிற்சாலை ஒன்றிற்கு, தையலில் தேர்ச்சியும் அனுபவமும் உள்ள பெண்கள் தேவை. உடன் விண்ணப்பிக்க: 65, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 3913

1971ம் ஆண்டுக்குப்பின்னைய மொடல் வோக்ஸ்வகன், மொறிஸ்மைனர், பேர்ஜோ 304. பசற் அல்லது கொலவ் கார் தேவை. தொடர்பு; யுகேந்திரன், 81, கே,கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி தொலைபேசி 7592, 7604 (3904)

## விளம்பரம்
### வெற்றுச்சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் சுமார் 300 வெற்றுச்சாக்குகள் கேள்விப் பத்திரமூலம் விற்பனையாகவுள்ளது இவற்றிற்கானவிண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 2/- செலுத்திப் பெறப்பட்ட விண்ணப்பப்படிவங்களை முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து 22-07-82 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்பாக சங்ககாரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் ''வெற்றுச்சாக்குக்கான கேள்விப் பத்திரம்'' எனக் குறிப்பிடவும்.

கேள்விப்பத்திர வைப்புப் பணம்-ரூபா 500/-ஆகும்.

பொதுமுகாமையாளர்.
அளவெட்டி மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம்.
3867

## குத்தகைக்கு

நெல்லியடிச் சந்திக்கருகாமையில், ஒட்டுக்கடையும் அரிசிஆலையும் குத்தகைக்கு கொடுக்கப்படும். விபரங்களுக்கு; பொன்னுத்துரை, தபால் கந்தோர் வீதி, கரவெட்டி. 87

## OPPORTUNITY FOR SECRETARIAL TRAINING IN ENGLISH

Applications are invited rom females in the age group 18-25 for training in secretarial work covering the following skills:

Shorthand, Typewriting, Telephone and Telex Operation, Office Management and Business English.

Place of Training:

Head Office of Navotec at 17, Alfred Place, Colombo-3, under the guidance of the Chairman of the Board of Trustees of Navotec.

Duration: Six Months.

Qualifications:

Minimum of O/L in one sitting with 5 credit passes of which English should be one.

Preference for those already possessing some experience in shorthand and typewriting.

Candidates will be expected to sit a written examination and face an interview.

Applications must be made in the applicant's own hand writing giving details about qualifications and sent by registered post to reach the undersigned on or before 15th. August, 1982. A non refundable application fee of Rs. 10/- either in money order or postal order favouring the Treasurer, Navotec, should accompany the application.

Selected candidates will receive a monthly allowance of Rs. 500/- but will have to find their own board and lodging.

Secretary,
Nallur Vocational
Training Technical
Institute,
C/o Ootru Organisation,
Mari Amman Lane,
Thirunelvely,
Jaffna. 3893

## ஜனாதிபதியை சந்தித்தவர்
### கலாநிதி வில்சன்

(கொழும்பு)
குட்டிமணி, ஜெகன் தங்கத்துரை ஆகியோருக்கு பனாகொடை இராணுவ முகாமில் 24மணிநேரம்போடப்பட்டிருந்த விலங்குகளை அகற்றுவது தொடர்பாக ஜனாதிபதியை எதிர்க்கட்சித்தலைவர்திரு அ. அமிர்தலிங்கத்துடன் சென்று சந்தித்த

(6-ம் பக்கம் பார்க்க)

## மாநகரசபை, யாழ்ப்பாணம்.

எமது வேலைத் தளத்தில் உள்ள 33 ஸ்ரீ 3439 லொறியைப் பார்வையிட்டு அதன் (ரிங்கர்) ஒட்டு வேலை செய்வதற்கு கூறுவிலை கோரப்படுகின்றது. காகித உறையின் இடது மூலையில் ''33ஸ்ரீ 3439 இலக்க லொறி பழுதுபார்த்தல்'' என குறிப்பிட்டு கூறுவிலைகள் பதிவுத் தபால் மூலம் 26-07-1982 ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். இவ்வேலை பற்றிய மேலதிக விபரங்களை சபையின் மராமத்துப்பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

சி. வீ. கே. சிவஞானம்
ஆணையாளர்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
14-07-82. (3912)

## ஒட்டுசுட்டான் சிவன் கோவிலுக்கு கணக்காளர் தேவை

1. தகைமை:- நேர்மையும். இந்து மதத்தைச் சேர்ந்தவரும், குறைந்தது 8-ந் தரம் படித்த எவரும் விண்ணப்பிக்கலாம். ஓய்வூதியம் பெறுபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
2. சம்பளம் :- பேசித் தீர்க்கப்படும்.
3. விண்ணப்ப முடிவு திகதி:- 25-7-82.
4. விண்ணப்பமுகவரி:-

சி. சிவபாலகுரு B. Sc.
செயலாளர்
சிவன் கோவில்,
ஒட்டுசுட்டான்.
3894

## தரமான சுத்தமான தேன் . . .

மொத்தமாகவும், சில்லறையாகவும்
நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ளலாம்.

தனலெட்சுமி ஸ்ரோர்ஸ்
கண்டி ரேட், மாங்குளம், போன்: 11
3891

## எமது ஸ்தாபனத்தின் இன்னுமொரு சேவை

உங்களிடம் தேவையற்ற அல்லது தேவைக்கு
அதிகமாக உள்ள எல்லாவிதமான
புதிய அல்லது பாவித்த பொருட்களை
25-07-82 மு. ப. 10-00 மணிக்கு நடக்கும்
ஏல அல்லது மலிவு விற்பனை
மூலம் விற்றுப் பணமாக்கித் தருவோம்.
உங்கள் பொருட்களின் பெயர்ப்பட்டியலை
21-07-82 க்கு முன் எமக்கு அனுப்பவும்.
மேலும் விபரங்களுக்கு நேரிலோ அல்லது
தபால் மூலமோ எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

ENGINEERING CONTRACTS AND SYNDICATE
BUSINESS ESTABLISHMENT,
50, மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி.
3902

## இஸ்ரேல் மீது பொருளாதாரத் தடை விதிக்க

# அணிசேரா நாடுகள் வற்புறுத்து

லண்டன், ஜூலை 17

ஆக்கிரமிப்பிலீடுபட்டுள்ள இஸ்ரேலுக்கெதிராகத் தடைகளைக் கொண்டுவரும்படி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தைக் கேட்டுக்கொள்வதென அணிசேரா இயக்கத்தின் அங்கத்தவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இஸ்ரேலின் முற்றுகையில் அகப்பட்டிருக்கும் சுமார் ஆறுயிரம் பாலஸ்தீனக் கொரில்லாக்களை, விடுதலைசெய்தல் வேண்டுமென்றும் பலதேசங்களின் படைகளைக் கொண்ட சமாதானப் படையொன்றை லெபனானில் நிறுத்துதல் அவசியமென்றும், அணிசேரா இயக்கத்தினர் ஐ நா.வை மேலும் வலியுறுத்தவிருக்கின்றனர்.

தென்லெபனானில் தற்போது யுத்தம் சற்றுத்தணிந்திருக்கின்றது நேற்றுமுன்தினம், லெபனானின் சிலமுக்கிய பகுதிகளை இஸ்ரேலிய ஜெட்விமானங்கள் வேவு பார்த்தனவாயினும் தாக்குதல்கள் எவற்றிலும் இறங்கவில்லை. இதேவேளை பாலஸ்தீனர்களும், லெபனான் வாசிகளும் பெரும் ஆர்ப்பாட்டமொன்றை பெய்ரூட்டில் இஸ்ரேலியர்களுக்கெதிராக நேற்றையதினம் நடத்தினர். இதில் பெருமளவில் பலர் கலந்துகொண்டனர்

இதுஇவ்வாறிருக்க லெபனானில் யுத்தத்தினால் பாதிப்படைந்தவர்களுக்கு நிவாரணமாக உணவுப் பண்டங்களை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பெய்ரூட்டுக்கு அனுப்பிவைத்துள்ளது. (கி)

### சுரங்கத்தினுள் விபத்து பதினொருபேர் பலி!

புதுடில்லி, ஜூலை 17

இந்தியாவினுள்ள பீகார் மாநிலத்தின் ஹசாரி பாத் மாவட்டத்தில் நிலக்கரிச் சுரங்கமொன்றில் ஏற்பட்ட விபத்தினால் பதினொருபேர் பலியாகியுள்ளனர். நால்வர் படுகாயமுற்றுள்ளனர். இவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் மூன்று மணியளவிலேயே இவ் விபத்து நிகழ்ந்தது. விபத்து நிகழ்ந்த வேளை 16 சுரங்கத் தொழிலாளர்கள் சுரங்கத்தினுள் நின்றதாகவும் ஆனால் பதினொருபேரே மரணமடைந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டது மீட்புவேலைகள் துரிதமாக நடத்தப்பட்டு வருகின்றன.

மத்திய எரிபொருள் அமைச்சர் இவ் விபத்துக் குறித்து பூரண நீதி விசாரணை நடத்தப்படுமென்றும், அதன் அறிக்கைகள் விரைவில் வெளியிடப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

விபத்தில் பலியான ஒவ்வொரு தொழிலாளியினதும் குடும்பத்துக்கு தலா பத்தாயிரம் ரூபாவை நஷ்டஈடாகவும், காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபாவை நஷ்ட ஈடாகவும் உடனடியாக வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மரணித்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை உடன் வழங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

### ஏழாலை ம. வி. அபிவிருத்திச் சங்கம்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் புதிய சுற்று நிருபத்துக்கமைய ஏழாலை மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுகூட்டம் கடந்த புதன்கிழமை மேற்படி பாடசாலை அதிபர் திரு. சு. கனகராசா தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி பணிகள் பற்றிபாராட்டு தெரிவிக்கப்பட்டதுடன் இனிமேல் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி முயற்சிகள் பற்றிய அறிக்கையை அதிபர் சமர்ப்பித்தார். புதிய நிருவாகிகள் தெரிவும் நடைபெற்றது.

தலைவராக பாடசாலை அதிபர் திரு.சு. கனகராசா, செயலாளராக பெற்றாரில் ஒருவரான திரு. த. திருஞானசம்பந்தர், பொருளாளராக ஆசிரியை திருமதி பீ ஜே. குணரத்தினம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் பதினைந்து பெற்றார்கள் ஆளுகைக் குழுவிற்கு ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

### திரு. ஸெயில்சிங்

## தேசத் தலைவர்களின் சமாதிகளுக்கு அஞ்சலி

புதுடில்லி, ஜூலை 17

இந்தியாவின் ஏழாவது ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள அறுபத்தியாறு வயதான திரு. ஸெயில்சிங் நேற்று தேசபிதா மகாத்மாகாந்தியின் சமாதியான ராஜ்காட்டிற்கும், பிரதமர் ஜவஹர்லால் நேருவின் சமாதியான சாந்திவனத்துக்கும் சென்று அஞ்சலி செலுத்தினார்.

சீக்கிய இனத்தவரான திரு. ஸெயில்சிங் அதிக இறைபக்தி கொண்டவராவார். தாம் சிறுவனாக இருந்தபோது பயங்கர வியாதியொன்றால் பீடிக்கப்பட்டிருந்ததாகவும், தமது பெற்றோர் இவ்வியாதியைத் தீர்க்க அயராது இறைவனைப் பிரார்த்தித்த வண்ணமிருந்தனரென்றும் அதன்பயனாக நீண்ட நாள் படுக்கையிலிருந்த தாம் விரைவில் சுகமடைந்ததாகவும், ஆகையினாலேயே தமக்கு சிறுபராயம்முதல் இறைவனிடத்தில் மிகுந்த பக்தி உண்டென்றும் தெரிவித்தார்.

புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள திரு ஸெயிங்சிங் இம்மாதம் 24ந் திகதி பிரதம நீதியரசர் முன்னிலையில் சத்தியப் பிரமாணஞ்செய்து தமது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்பார். (கி)

### 1992 ஒலிம்பிக் பந்தயங்களை

## இந்தியாவில் நடத்த தீர்மானிக்கப்படுகின்றது

புதுடில்லி, ஜூலை 17

இந்தியாவில் நடைபெறவிருக்கும் ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் வெற்றிகரமாக நிறைவுபெறும் பட்சத்தில், 1992ம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டிகளையும் இந்தியாவில் நடத்த இங்குள்ள விளையாட்டுத்துறை சார்ந்த அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 19ம் திகதியிலிருந்து டிசம்பர் மாதம் 4ந் திகதிவரை ஆசிய விளையாட்டுப்போட்டிகள் புதுடில்லியில் நடைபெறவிருக்கின்றன. இவ் விளையாட்டுப் போட்டிகளுக்கான ஏற்பாடுகள் யாவும் கடந்த ஒன்றரை வருடகாலமாக நடைபெற்று தற்போது இவை பூர்த்தியடையும் நிலையில் காணப்படுகின்றன. சுமார் 100 கோடி அமெரிக்க டாலர்கள் இதற்கெனச் செலவளிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் இதுவரை காலமும மேற்கொள்ளப்படாத பெரும் ஏற்பாடுகளை ஆசியப் போட்டிகளை நடத்தவிருப்பதன்மூலம் விளையாட்டு வீரர்களுக்கும், பிரியர்களுக்கும் ஆசிய விளையாட்டு ஏற்பாட்டுக் குழுவினர் செய்து வருகின்றனர். எனவே திட்டமிடப்பட்டுள்ளவாறு ஆசிய விளையாட்டுக்களை நிறைவுசெய்யும் பட்சத்திலேயே ஒலிம்பிக் பந்தயத்தை 1992ம் ஆண்டு இந்தியாவில் நடத்துவதற்கான சம்மதத்தை இந்திய அரசிடமிருந்து பெற்று கொள்ள முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளார். (கி)

### இளவாலை கன்னியர்மட வித்தியாலய தினவிழா

(பண்டத்தரிப்பு)

இளவாலை கன்னியர்மட வித்தியாலய தினவிழா கடந்த சனிக்கிழமையன்று முற்பகல் டலிப்பூசையுடன் ஆரம்பமானது.

வித்தியாலய அதிபர் சங். சகோதரி விக்ரறின் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் சண்டிலிப்பாய் கிராம சேவை அலுவலர் திரு, வி. கபிரியேற்பிள்ளை பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில் இவ்வித்தியாலயத்தில் கற்கும் மாணவிகள் கல்வித்துறையில் மாத்திரமன்றி கலை, கலாச்சாரத் துறையிலும், விளையாட்டுத் துறையிலும் சிறந்து விழங்கி வருவது தமக்குமிகுந்த மகிழ்ச்சியளிப்பதாகவும், அதிபர் ஆசிரியர்கள், மாணவிகள் ஆகியோர் ஒத்துழைத்து அவர்களின் அயராத முயற்சியினால் இவ்வித்தியாலயம் முன்னேற்றமடைந்து வருவதைப் பெரிதும் பாராட்டுவதாகவும் குறிப்பிடார்.

வித்தியாலய முன்னாள் உப அதிபர் திருமதி மக்ரட் துரையப்பா உரையாற்றுகையில் மாணவிகள் அன்பு, அறிவு, ஒழுக்கம் மிக்கவர்களாக மிளிர்ந்து எதிர்காலத்தில் சிறந்த தாய்மார்களாக— குடும்பத்தலைவிகளாக— எதிர்கால நற்பிரஜைகளாக விளங்க நற்பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்கவேண்டும் என்று குறிப்பிட்டார். இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## "உலக சமுதாயம் இஸ்ரேலை தனித்து ஒதுக்கவேண்டும்"

### இந்திய வெளிநாட்டமைச்சர் கூறுகிறார்

லண்டன் ஜூலை. 17

'இஸ்ரேல், சர்வதேச கருத்தைமீறி, சட்டவிரோதமாக நடந்துவருவதால், உலக சமுதாயம் அந்நாட்டை முற்றாகத் தனித்து ஒதுக்க வேண்டும் என்று' இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. நரசிம்மராவ் சைப்பிரஸில் நடைபெற்று வரும் அணிசேராநாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அறைகூவல் விடுத்தார்.

அவர் மேலும் பேசுகையில் ''மேற்கு பெய்ரூட்டிலிருந்து இஸ்ரேலியத் துருப்புக்கள் முற்றுகையை விலக்கவேண்டும். அங்கு இடைக்கால ஐ நா. படையொன்றைநிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். [வெ)

### "ஈரான் — ஈராக்

# பொதுவான கருத்துக்கள் இருநாடுகளிடமும் இல்லை"

## இந்திய வெளிவிவகார அமைச்சர் கருத்து

நிக்கோஸியா, ஜூலை 17

வளைகுடா யுத்தம் உடனடியாக நிறுத்தப்படுவது பெரும்பாலும் சாத்தியமானதல்லவென்றும், ஈரான்— ஈராக் ஆகியனவற்றிற்கிடையே பொதுவான கருத்துக்கள் இல்லாமையே யுத்தநீடிப்புக்குக் காரணம் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி வி நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

லெபனான்,வளைகுடா நெருக்கடிகளைத் தீர்த்து வைக்கும் வகையில் அணிசேரா இயக்க நாடுகளைச் சேர்ந்த நான்கு நாடுகளின் பிரதிநிதிகள் சைப்பிரஸின் நிக்கோசியா நகரில் கூடியுள்ளனர். அங்கு இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைக் கொண்டே திரு. நரசிம்மராவ் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.

கியூபா, ஸாம்பியா, இந்தியா ஆகிய நாடுகள் உட்பட பாலஸ்தீனவிடுதலை இயக்கமும் தற்போது சைப்பிரஸில் கூடி யுத்த நிறுத்தத்துக்கான ஆலோசனைகளை மேற்கொண்டு வருகின்றன.

திரு பி வி. நரசிம்மராவ் வெளியிட்டுள்ள கருத்தொன்றில் தாம் ஈரானியப்பிரதிநிதியுடன்நடத்திய பேச்சுவார்த்தையில்ஈரான், ஈராக்கிய அதிபர் ஜனாப் சதாம் ஹூசைனின் ஆட்சியைக் கவிழ்ப்பதனையே கருத்தாகக் கொண்டு செயல்படுகின்றதெனத்தெரிவித்தார்

ஈரான், ஈராக்கினுல் மேற்கொண்டிருக்கும் படையெடுப்புக்குறித்து ஈரானின் மத அரசாங்கத்தலைவரான அயத்தொல்லா கொமெய்னி தெரிவித்துள்ள கருத்தில் ஈராக்கிய மக்களை ஜனாதிபதி சதாம் ஹூசைனின் பிடியிலிருந்தும் விடுவிக்கும்வரை போர் தொடரும் என அறிவித்துள்ளார்.

இதேவேளை, ஈரானியப் படைகள் கைப்பற்றிய 'பஸ்ரா' நகரில் ஈராக்கிய படைகள் தமது நிலையைப் பலப்படுத்தி வருகின்றன என்றும் ஈரானின் தென்கிழக்குப் பகுதியில் ஈராக்கிய ஜெட்விமானங்கள் இரண்டு நடத்திய தாக்குதல்களினால் முப்பது பேர் கொல்லப்பட்டிருப்பதுடன் பலர் காயமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மும்மரமாக நடைபெற்று வரும் வளைகுடா யுத்தத்தில் தாம் பல வெற்றிகளைப் பெற்றிருப்பதாக ஈரானும், ஈராக்கும் கூறிவருகின்றபோதிலும் உண்மையான தகவல்களைப் பெறுவது கடினமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (கி)

## ஜோர்ஜ் ஷூல்ஸ் அமெரிக்க ராஜாங்க அமைச்சர்

### சோவியத்யூனியன் பாராட்டு

வாஷிங்டன், ஜூலை. 17

ஐக்கிய அமெரிக்காவின் புதிய ராஜாங்க அமைச்சராக கலாநிதி ஜோர்ஜ் ஷூல்ஸ் நேற்றுப்பதவியேற்றார். இப்பதவி யேற்பு வைபவம் வாஷிங்டனிலுள்ள அமெரிக்க ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான வெள்ளை மாளிகையில் நடைபெற்றது.

கடந்த மாதம் ஜெனரல் அலெக்ஸாண்டர் ஹெய்க் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்ததையடுத்தே புதிய ராஜாங்க அமைச்சராக ஜோர்ஜ் ஷூல்ஸ் நியமனம் பெற்றுள்ளார்.

ஜோர்ஜ் ஷூல்ஸ் அமெரிக்க ராஜாங்க அமைச்சராகப்பதவியேற்றிருப்பது குறித்து சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு. கிறொமிக்கோ, வாழ்த்துச் செய்தியொன்றை திரு. ஷூல்சுக்கு அனுப்பிவைத்துள்ளார். அதில் இப்புதிய நியமனம் ரஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்குமிடையே நல்லுறவைநீடிக்க வழிவகுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

### வன்னியிலும் சுதந்திரக் கட்சி போட்டியிடும்

(வவனியா)

பொதுத்தேர்தலில் வன்னி தேர்தல்தொகுதயில ஸ்ரீலங்கா

(6-ம் பக்கம் பார்க்க)

# பண்டாரவன்னியன் தமிழன் என்பதில் என்ன சந்தேகம்?

## பார்சல் குண்டுகளால் யாருக்கு நன்மை?

வன்னியின் மாவீரன் பண்டாரவன்னியன் தமிழனு சிங்களவனு என்று ஒருபிரச்னை கிளப்பப்படுகின்றது.

அரசாங்க உயர்மட்டத்தினர் பண்டாரவன்னியன் ஒரு சிங்களக் குறுநில மன்னன் என்றவகையிலேயே சிந்திப்பதாகத் தெரிகின்றன.

அரசாங்கக் குறிப்புகளில் வன்னி பண்டார என்றே அவனைக்குறிக்கப்படுகின்றதாம். இது சிங்களப் பெயர் போலவே ஒலிக்கின்றது கற்சிலை மடுவில் 1803ல் வெள்ளையரால் கல்லில் செதுக்கப்பட்ட வாசகத்தில் 'பண்டார வன்னியன்'' என்றே பொறிக்கப்பட்டுள்ளது. 'பண்டார வன்னிய' என்று பொறிக்கப்படவில்லை தமிழ்ப் பெயர்களே 'ன்' 'ர்' என்ற குற்றெழுத்துக்களுடன் முடிவுறும்.

அக்கல்லில் பின்வருமாறு பொறிக்கப்பட்டுள்ளது, "This is where about so Pandaravanniyan was Defeated by Captain Von Driberg–31st October 1803'' இந்தப் பகுதியில் தான் தளபதி வொன் டிறிபேர்கினுல் பண்டார வன்னியன் தோற்கடிக்கப்பட்டான் 31, அக்டோபர் 1803''

ஆங்கிலேயர்களாலேயே 'பண்டாரவன்னியன்' என்று அழைக்கப்பட்ட அவ்வீரன் தமிழன்தான் என்பதில் சந்தேகமிருக்கமுடியாது,

ஆனுல் அண்மையில் வெளியான ஒரு செய்தியில் பண்டார வன்னியன் தமிழனு சிங்களவனு என்பது இன்னமும் தெளிவு படுத்தப்படவில்லையென்று ஒரு உயர் அதிகாரி கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி விரிவாகவும் தெளிவாகவும் ஆராய்ந்து விளக்கவேண்டியது நமது வரலாற்று ஆசிரியர்களின்கடமை.

வவுனிய பாராளுமன்ற உறுப்பினர் திரு ரி. சிவசிதம்பரம் பண்டாரவன்னியன் பற்றிய வரலாற்றினை தெளிவாக அறிந்து வைத்துள்ளார் [illegible] பற்றி பாராளுமன்றத்தில் அவர் ஒரு விளக்கம் அளிக்கலாமே!

### பார்சலில் கோம்பைகள்

வீரம் எது, பயங்கரவாதம் எது என்பது இப்போதெல்லாம் அவர்அவர் சிந்தனையைப் பொறுத்தவிடயமாகிப் போய் விட்டது.

பார்சலில் குண்டுபோகிறது. யாரோ இடையில் இருக்கும் அப்பாவி குண்டுவெடிப்புக்கு ஆளாகி மரணமாகிறுர்.

இதையாரும் வீரத்தனம் என்று சொல்லமாட்டார்கள். குண்டு அனுப்பியவர்கள் தமது கெட்டித்தனத்தை நினைந்து பெருமிதப்பட்டுக் கொள்ளக் கூடும்.

பி. எஸ். பி.

யாரோ ஒரு அமைச்சருக்கு விலாசமிட்ட பார்சல்களை யாழ் நகரில் சில தினங்களுக்குமுன் ஒரு உபதபால் நிலையத்துக்கருகில் கண்டெடுத்தார்கள், ஏற்கனவே பார்சல் குண்டு பயங்கரத்தில் மூழ்கியிருந்த ஆயுதப் படையினர் உஷாராகி மிகுந்த கவனத்துடன் பார்சல்களைத் திறந்துபார்தபோது வெறும் கோம்பைகள்தான் உள்ளே இருந்தன!

அதிகாரிகளை ஏமாற்றமுறச் செய்வதில் வெற்றிகண்ட பார்சலை வைத்தவர்கள் அந்தரங்கமாக கெக்களிகொட்டி சிரித்திருப்பார்கள்.

இவைகளல் சிலருக்கு திருப்தி ஏற்படுவதாய்இருக்கலாம் ஆனுல் பொதுமக்கள்வீண்கலக்கத்துக்கும் திகிலுக்கும் ஆளாவதை இவர்கள் உணர்வது அவசியம்.

பயங்கரவாதமோ. இல்லையோ, எதை எவர் செய்தாலும் பொதுமக்கள் நன்மையைக் கருதித்தானே செய்வதாகக் கூறுகிறுர்கள். அது அந்த மக்களுக்கு கிலிஊட்டுவதாக இருப்பின் எவருக்கு லாபம்?

### கவிதையில் சேபால

இத்தாலிய விமானத்தைக் கடத்திய சேபால ஏக்கநாயக்க கொழும்பு திரும்பியபோது 'ஜயவேவா' என்று அங்கு கூடியிருந்தவர்கள் கோஷம் எழுப்பி வரவேற்றுர்கள்.

இப்பொழுது ஏக்கநாயக்காவை ஒரு வீரனுக வர்ணித்து கவிதைகளும் வெளியிடப்படுகின்றனவாம்

சேபாலவின் வீரத்தை மெச்சிப் பாடப்பட்ட கவிதைப் பிரசுரங்கள் இப்பொழுது தென் பகுதி பஸ் நிலையங்கள்தோறும் பாடி விற்கப்படுகின்றன.

பலநாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான பிரயாணிகளைக்கொண்ட விமானத்தை தகர்த்தெறிவதாகப் பயமு

(5ம் பக்கம் பார்க்க

# மாமறைபோற்றும் மகத்தான இரவு

சர்வ வல்லமையுள்ள அல்லாஹ் நம்மவர்களின் வாழ்க்கையை தூய்மையாக்கும் பொருட்டு வருடத்தில் ஒரு மாதத்தை விசேஷமாக நமக்கு அளித்துள்ளான் அம்மாதம் தான் ரமழான். மக்களின் பாவங்களை அழிக்கும் மாதம் எனப்படும். அம் மாதம் மற்ற மாதங்களைக் காட்டிலும் மிகவும் தலைசிறந்த மாதமாகும் வள்ளல் நபி [ஸல்] அவர்கள் ரமழான் மாதத்தைப் பற்றி பிரஸ்தாபிக்கும்போது ரமழான் மாதத்தின் சிறப்புக்களையும், மேன்மையையும் எனது நபிமார்களும் அவர்களின் உம்மத்தவர்களும் அனுஷ்டித்து வந்துள்ள நோன்பிற்கும், நாயகத்தின் உம்மத்தவர்களின் நோன்பிற்கும் எண்ணிக்கையிலும் அனுஷ்டான முறையிலும் சில வேறுபாடுகள் காணப்படுகிறது. ஆயினும் நோன்பு அனுஷ்டிக்கும் கடமை எல்லாம் எல்லோர் மீதும் ஏற்படுத்தப்பட்டிருந்தது என்பதில் ஐயமில்லை.

காலத்திற்கும் மானிட சுபாவத்திற்கும் ஏற்றவாறு இறைவன் அக்காலங்களில் இக் கட்டளையை பிறப்பித்துள்ளான்

(புனித 'லைலது கத்ர்' இரவையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது)

உம்மத்தவர்களின் அனேகர் நன்கு அறிந்திருப்பார்களாயின், வருடம் முழுதும் ரமழான் மாதமாகவே இருக்க விருப்பப்படுவார்கள் என இயம்பியுள்ளனர் ரமழான் மாதம் முழுதும் நோன்பு நோற்பது, இஸ்லாத்தின் ஐம் பெரும் கடமைகளுள் ஒன்ருகும். மனித கோடிகள் அனைவருக்கும் மூல பிதாவும் முதல் மனிதருமான ஆதம் [அலை] அவர்கள் காலம் முதல் நோன்பு நோற்கும் பழக்கம் இருந்து வருகிறது. முந்தைய ஆதம் [அலை] அவர்கள் மீது ஒவ்வொரு மாதமும் பிறை 13ம், 14ம், 15ம் ஆகிய மூன்று தினங்கள் நோன்பிருத்தல் கடமையாக இருந்தன. நபி மூஸா [அலை] அவர்களின் மீதும் அவர்களின் உம்மத்தவர்களின் மீதும் முஹர்ரம் 10-ம் நாள் நோன்பிருத்தல் கடமையாக இருந்தன.

நமது நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஒன்பது ஆண்டுகள் ரமழான் நோன்பு நோற்றுள்ளார்கள். எட்டாண்

(5 ம் பக்கம் பார்க்க

# இன்று வெள்ளிவிழா
# யாழ். சௌக்கிய கூட்டுறவு சேமிப்பு சங்கத்தின் சேவை

தனது அங்கத்தவர்கட்கு ஓரளவிற்கு திருப்தி ஏற்படக் கூடிய முறையில்15 09.1955ல், 48 அங்கத்தவர்களுடன் வைத்திய அதிபர் திரு. சி எம். வன்னியசேகரம் தலைமையிலும், கூட்டுறவுப்பரிசோதகர் திரு. மகேஸ்வரன், கூட்டுறவுக் காரியாலயப் பரிசோதகர் திரு. குமாரசாமி ஆகியோர் முன்னிலையிலும் ஆரம்பிக்கப்பட்டது. யாழ். ஆஸ்பத்திரி கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்திச் சங்கம்

இச்சங்கம்ஆரம்பிக்கப்பட்ட நோக்கங்கள் பற்றி திரு எஸ். ஆர். அருமைநாயகம் சபைக்கு விளக்கிக் கூறியபோது, ஒரு சில திருத்தங்களுடன் அவ் விளக்கத்தை ஏற்று தவழும் குழந்தையாக சங்கம் நடைபோடத்தொடங்கியது ஆரம்ப காலத்தில் அங்கத்தவர்களின் சேமிப்பு ரூபா 3/- ஆக இருந்தது. இக்காலத்தில் தலைவராக திரு. சி எம். வன்னியசேகரம், காரியதரிசியாக திரு. எஸ். ஆர். அருமைநாயகம், தனுதிகாரியாக திரு. எம். கந்தையா ஆகியோர் சங்க வளர்ச்சிக்காக செயற்பட்டார்கள்.

1960ல் திரு. எஸ். ஆர். அருமைநாயகம் தலைவராகப் பதவிவகித்த காலங்களில்சங்க வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார்ஒய்வில்செல்லும்அங்கத்தவர்களுக்கென ரூபா 2/- அங்கத்தவர்களிடம் இருந்து அறவிடப்பட்டு ஓய்வு சகாய நிதியும் வழங்கப்பட்டு வந்துள்ளது.

1963ல் யாழ் ஆஸ்பத்திரிக் கூட்டுறவுச் சிக்கன சேமிப்புக் கடன் நிவர்த்திச் சங்கம் என்னும் பெயர் மாற்றப்பட்டு, யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்திச் சங்கம் எனப்பெயரிடப்பட்டது. இதனுல் யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் இருக்கும் அரசாங்க வைத்தியசாலைகளில் கடமை புரியும் ஊழியர்கள் இச்சங்கத்தில் அங்கத்தவர்களாகச்சேரும் வாய்ப்பு ஏற்பட்டது. இதனுல் அங்கத்தவர்களின் எண்ணிக்கை ஓரளவு உயர்ந்து வந்தது. 1000/- ஆகக் கொடுக்கப்பட்ட விசேட கடனை ரூபா 2000/- கொடுப்பதற்குத் தீர்மானித்து மக்கள் வங்கிலிருந்து கடனைப்பெற்று குறைந்த வட்டி வீதத்தில் இக்கடனை அங்கத்தவர்களுக்கு கொடுத்து உதவியது.

சங்க அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வந்தமையாலும், சங்கவேலைகள் அதிகரித்ததினுலும், சங்க அலுவல்களைக் கவனிக்கும் பொருட்டு ஓர் முழுநேர ஊழியராகவும், நிர்வாகக் காரியதரிசியாகவும் திரு. ம. மரியநயகம் நியமிக்கப்பட்டார். இவர் இரு ஆண்டுகள்வரை சங்கத்தோடு சிறப்பாக ஒத்தழைத்து கடமைகளை சரிவர ஆற்றி வந்தார். பின்பு இவருக்கும் நிர்வாகத்திற்குமிடையே ஏற்பட்ட பிணக்குகளினுல் இருவருடமாகத் தொழிற்கோட்டு விசாரணை நடைபெற்று அதன் தீர்ப்பின் பேரில் இரைவ வேலையினின்று நிறுத்தியதினுல் இவருக்கு நஷ்ட ஈடாக பத்தாயிரம்வரை வழங்க வேண்டிய நிலை சங்கத்திற்கு ஏற்பட்டது. இதனுல் சங்க வளர்ச்சியில் தாக்கம் ஏற்பட்டது.

தவழும் குழந்தையாக வளர்ந்து வந்த சங்கத்தில் திடீரெனப் பெரும் திருப்பம் காணப்பட்டது. அதனதுபதினுருவது ஆண்டிலே திருமதியோ கென்ஸமன் சங்கத்தின் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டார். இவரது காலங்களில் சங்க வளர்ச்சிகுன்ருமல் மெருகூட்டி வளர்ந்து கொண்டே வந்தது. இக்காலத்தில் சங்க அங்கத்தவர்களின் எண்ணிக்கை 577 ஆகும். 1971ன் நடுப்பகுதியில் திருமதி யோ. கென்ஸமன் இலாகாவில் இருந்து ஓய்வில் சென்றுள்ளபடியால் அவரின் பொறுப்புக்களையும், பணிகளையும் உபதலைவராசிய திரு.பொ. தேவராஜா ஏற்றுக்கொண்டு சங்கத்தை திறம்பட இயக்கி வந்தார். 02 10.72 ஏகோபித்த ஆதரவுடன் புதிய தலைவராக திரு பொ. தேவராஜாதெரிவு செய்யப்பட்டார் இவர் தலைமைப்பதவி ஏற்றகாலத்தில் சங்கத்தின் நிகரலாபம் 11000/- ஆகக் கூடியது.

அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் விசேட கடன் ரூபா 2000/-ஐ, ரூபா 3000/- ஆக உயர்த்தப்பட்டது. ஓய்வில் செல்லும் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வு சகாய நிதி ரூபா 2/-ல் இருந்து ரூபா 3/- ஆக அதிகரிக்கப்பட்டது.

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு ஏற்பட்ட காரணத்தினுல் அங்கததவர்களின்

(5-ம் பக்கம் பார்க்க)

-சி. செல்லத்துரை -

(செயலாளர் யாழ். சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்தி சங்கம்)

பண்ணுகம்

# விசவத்தனை முருகமூர்த்தி கோவில் மண்டலாபிஷேகம்

ஈழமணித்திருநாட்டின் வடபால் யாழ். நகரின் மேற்றிசையில் உள்ள பண்ணுகப் பதியில் விசவத்தனை எனும் தலத்தில் எழுந்தருளி இருந்து அடியார்களுக்கு அருள்வழங்கும் முருகப் பெருமானின் மஹாகும்பாபிஷேகம் கடந்த 4-6-82ம் திகதி ஆரம்பமாகி இன்று மண்டலாபிஷேகத்துடன் நிறைவேறுகின்றது.

இவ்வாலயம் மிகவும் பழமை வாய்ந்தது. இப்பகுதி வாழ் மக்களின்குலதெய்வம் சோலைகளும், கழனிகளும் சூழ்ந்த அழகிய தலத்திலே அழகன் முருகன் வள்ளி தெய்வயானை சமேதராக வீற்றிருந்து வந்தாரை எல்லாம் வாழவைத்து, அண்டினேர்க்கருள் தந்து அற்புதங்கள் பல செய்துகொண்டிருக்கின்றுன். அவனது திருவதனப் பொலிவை பேரெழில் மிக்க தோற்றத்தை காணும் தோறும், நினைக்குந்தோறும் எம்மையறியாமலே எம்முள் ஓர் இன்ப,பேரானந்தஉணர்வு ஏற்படுவதை நாம் மறக்கமுடியாது வேலைத்தாங்கி நின்று எம்வினையெல்லாம் போக்கும் எந்தை முன் நிலையில் பரவசமடையாத ஆன்மகோடிகளுமுண்டோ! சேந்தனைக் கந்தனைச் செங்கோடடு வெற்பனைச் செஞ்சுடர்வேல் வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்தோனை விளங்குவள்ளி காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார் மயில் வாகனனை கண்ணுரக் கண்டு கருத்தார உணர்ந்து களிபேருவகை எய்தாத பிறவியினுல் யாதுபயன்.

சென்ற ஆண்டு வைகாசித் திங்கள் 21ம் நாள் (3-4-81 சுவாமி பாலஸ்தாபனம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஆலய புனருத்தாரண வேலை நடைபெற்றது. யாக மண்டபம், மடைப்பள்ளி, களஞ்சியம், மூலவர், ஷண்முகர், பைரவர், சண்டேசுவரர், நவக்கிரகம் ஆதிய கோயில்களின் தூபிகள் பெருஞ்செலவில் புனர்நிர்மாணஞ்செய்யப்பட்டன.

கவினுறு சித்திரத் தேரில் இவர்ந்து பவனிவரும் பன்னிரு கரனைக் கண்டுகளித்த நாம், அவன் கும்பாபிஷேகக் காட்சியைக் காணக் கொடுத்துவைத்தோம் என, இப்பிறவிப் பெரும்பயனை அடைந்த பெருமையினிற்றிளைடபோம.

இன்று அடியார்களுக்கு பகல் அன்னதானமும் இரவுகலைநிகழ்ச்சிகளும் இடம்பெறு .

சோ. க. வேலாயுதர்

## ரமழான் சிந்தனை

''நோன்பு உணவையும் குடிப்பையும் தடுப்பதில் மாத்திரமல்ல வீணுன பேச்சையும் கெட்ட வார்த்தைகளையும் தடுப்பதாகும்.''

ஸஹர் முடிவு: 4-27
நோன்பு திறக்கும் நேரம்: 6-31

தொகுப்பு: சுல்பிகா — கௌது

## பண்டார...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

றுத்திக் கடத்திச்சென்றவர் உலக அபிப்பிராயத்தின்படி ஒரு சர்வதேசப் பயங்கரவாதி ஆனல் சிலருக்கு அவர் ஒரு மகாவீரர்!

சேபால நாடு திரும்பிய சமயமே அவரைக் கைதுசெய்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் கருதப்பட்டதாம். ஆனல் பாங்கொக்கிலுள்ள இலங்கைத் தூதுவர் திருமதி மானெல் அபயசேகரா 'நாடு திரும்பியதும்' கைது செய்வதில்லையென்று அளித்த வாக்குறுதியைக் காப்பாற்று முகமாகவே அவர் உடனடியாகக் கைதுசெய்யப்படவில்லையென்று கூறப்படுகிறது.

### எதிர்க்கட்சிகளின் நிலை என்ன

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தனித்துப் போட்டியிடக் கூடிய வகையில் மூன்று அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. ரோகண விஜயவீராவின் ஜனதாவிமுக்தி பெரமுன என்று அழைக்சப்படும் மக்கள் விடுதலை முன்னணி, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான நவ சமசமாஜக்கட்சி, மற்றும் ஏ. அஸீஸ் தலைமையிலான ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் பிரிவு ஆகியவையே அம்மூன்று கட்சிகளும்.

மக்கள் விடுதலை முன்னணியும், நவசமசமாஜக் கட்சியும் இடதுசாரி இயக்கங்களானலும் இடதுசாரி முதியதலைவர்களின் தலைமைகளுக்கு சவால் விடுபவை. இளம்சந்ததியினரையே பெரும்பாலும் பிரதிநிதித்துவம் வகிப்பவை. இக்கட்சிகள் தேர்தலில் தனித்துப் போட்டியிடுயதாயின் இடதுசாரி ஆதரவு வாக்குகள் பெருவாரியாகப் பிரிந்துபோகும். இது ஆளும் கட்சிக்கே சாதகமாக அமையும்.

இதேபோன்று ஜனநாயகத் தொழிலாளர்காங்கிரஸ் தனித்துப்போட்டியிடுவதாயின் இந்திய வம்சாவளியினரின் வாககுகளை ஓரளவு பிரிக்க முடியும். கடந்த தேர்தலின்போது இவ்வியக்கத்தின் ஆதரவு பெரும்பாலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியையே சார்ந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

மக்கள் விடுதலைமுன்னணிக்கு தேர்தல் சின்னமாக மணியும் ஜனநாயகக் காங்கிரஸிற்கு ஏணியும், நவசமசமாஜக் கட்சிக்கு குடையும் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் புதிய மூன்று கட்சிகளையும் சேர்த்து மொத்தம் 12 கட்சிகள் தேர்தலில் போட்டியிடத் தகுதிபெற்றுள்ளன. சிறிலங்கா சுதந்திரக்கட்சியை பொறுத்தவரை எந்தப்பிரிவுக்கு அங்கீகாரம் கிடைக்கும் என்று தெரியவில்லை.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவு நீக்கப்பட்டு ஒற்றுமை ஏற்படாதவிடத்து இக்கட்சிக்கு ஆதரவு தரக்கூடிய ஏனைய எதிர்க்கட்சிகளுக்குள்ளும் கருத்து வேற்றுமைகள் வலுவடையக்கூடும். இது எதிர்க்கட்சிகளுக்குள் மேலும் விரிசல்களையே ஏற்படுத்தும்.

பிளவுபட்ட சிறிலங்காசுதந்திரக்கட்சியின் ஒரு பிரிவை அங்கீகரிப்பதில் ஏற்படும் காலதாமதம் அக்கட்சியைமீண்டும் ஒன்றுபடுத்துவதைவிட ஏற்கனவே உள்ளபிளவை மேலும் விரிவடையச் செய்வதாகவே தெரிகின்றது.

மேலும் கடந்த காலங்களில் போன்று ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராக போட்டித் தவிர்ப்புஒப்பந்தங்களைசெய்து கொள்வதும் இந்த முறை புதிய தேர்தல் சட்டங்களின்படி சாத்தியமில்லையென்று தெரிகின்றது.

## யாழ்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சேமிப்பையும் கூட்டுவது சிறந்ததென அந்நேரத்தில் இருந்த கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. சி. நாகலிங்கத்தின் ஆலோசனையின் பேரிலும் பொதுச் சபையின் பேரிலும் சேமிப்பு ரூபா 5/ல் இருந்து ரூபா 10/- ஆக உயர்த்தப்பட்டது. ''சிறு துளி பெரு வெள்ளம்'' என்பதற்கியைய அங்கத்தவர்களின் சேமிப்புப் பணம் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருகி ரூபா 4,79,608ஆகியது.

மரணசகாயம் கொடுப்பதில் சிறு மாற்றங்கள் ஏற்பட்டன. ஓய்வில் சென்ற அங்கத்தவர்கள் தொகை அதிகரித்து வந்தமையால், ஒழுங்குமுறைப்படி ஒவ்வொரு மாதத்திலும் இரு ஓய்வு சகாயமும், அந்தந்த மாதங்களில் ஏற்படும் மரணங்களுக்கு மரணசகாய நிதியும் வழங்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டதுடன் நடைமுறையிலும் செயற்படுத்தி வருகின்றோம். சங்கத்தின் இலாபம் அதிகரித்து வந்தமையால் அக்காலத்தில் இருந்த சங்க நிதிப்பரிபாலகர் திரு. ச. பாலசுப்பிரமணியத்தின் ஆலோசனையுடனும், நிர்வாக சபையினர், அங்கத்தவர்கள் அவரோடு உறுதுணையாக நின்று அளித்த ஆதரவின் பேரில் இரண்டு இலட்சம் ரூபாவை மக்கள் வங்கியில் நிலையான வைப்பில் வைத்துள்ளோம்.

புதிதாகச் சேரும் அங்கத்தவர்கள் ஒரு வருடம் பூர்த்தி அடைந்தால் ரூபா 1000/மும் ஒவ்வொரு வருடத்திற்கும் ஆயிரம் ரூபாயும் ஐந்து வருடம் அதற்கு மேற்பட்டவர்களும் ரூபா 5000/-பெறலாம் என்று தீர்மானிக்கப்பட்டதுடன் தற்போது நடைமுறையிலும் செயற்பட்டுவருகின்றது.

இக்கால கட்டத்தில் சங்கத்தின் பண நிலையும், அங்கத்தவர்களின் தொகையும், சங்க வேலைகளும் அதிகரித்து வந்தது. இதனல் குமாஸ்தாவின் நிலையை ஆராய்ந்த அக்கால நிர்வாக சபை சம்பளம் உயர்த்த வேண்டுமெனக் கோரியதின் பேரிலும் எண்பாவையாளரின் ஆலோசனையின் பேரிலும் அவரை க/கு இலிகிதர் தரம் 1 உயர்த்தி வேதனங்களையும் வழங்க வேண்டுமென எண்ணு ஆணையாளரின் அனுமதியுடன் இன்று நடைமுறைப்படுத்தி வருகின்றோம். எமது சங்கத்தின் வளர்ச்சியைக்கண்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் வெளிநாட்டில் இருந்துவந்த இரு பிரதிநிதிகளை இரு சந்தர்ப்பங்களில் எமது சங்கத்திற்கு அழைத்து சங்கத்தின் வளர்ச்சியையும் அதனுடைய நோக்கங்களை பற்றியும் விபரித்துக் கூறினர். அவர்களும் சங்கத்தை நேரில் பார்வையிட்டு வாழ்த்திச்சென்றனர் திரு. சன் துரைசிங்கம் கூட்டுறவு சிக்கன சேமிப்பு முகாமையாளர் மலேஷியா 07-05-81ல் விஜயம் செய்துள்ளார்.

திரு ஜோர்ஜ் புக்காறு கூட்டுறவு மந்திரி, சிவா லுயாசி ஐலண்ட் 04-10-8 ல் விஜயம் செய்தார்.

செயலாளர் திரு. சீ. செலத்துரை முயற்சியினல் அங்கத்தவர்களினதும், அவர்களினது பிள்ளைகளின் எதிர்காலத்தை நோக்கி ஒவ்வொரு அங்கத்தவரும் ரூபா 600/- ரூபா 1200/- என்ற ரீதியில் இலங்கை வங்கியின் அறக்கொடைத்திட்டத்தில் சேர வேண்டுமென எண்ணியதின் பேரில் 06-02-82ல் நடைபெற்ற விசேட பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு அதற்கு ஏற்ப உபவிதியும் திருத்தப்பட்டு 93 அங்கத்தவர்கள் கிட்டத்தட்ட 76 ஆயிரத்திற்கு மேல் வங்கியில் வைப்புச் செய்துள்ளார்கள். இத்திட்டத்தை இலங்கை வங்கி நிறுத்தியுளளதால் தொடர்ந்து செயற்படுத்தமுடியாதையிட்டு வருந்துகின்றோம்.

இக்காலத்தில் திரு. பொ. தேவராஜா அரச சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளபடியால் 1980 ஐப்பசியில் திரு. ச. சிவரெத்தினம் அவர்கள் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். இவரது காலங்களில் சேமிப்பு ரூபா 10/- இருந்து ரூபா 15/-ஆக உயர்த்தப்பட்டது. விசேட கடன் ரூபா 3000/-. ரூபா5000/-ஆக உயர்த்தப்பட்டது. மரணசகாய நிதி ரூபா 2/- இருந்து ரூபா 3/-ஆக அதிகரித்தது.

## மாமா மேலே பார்த்தபடி கிடந்தார்

# பக்கத்தில்இரத்தக்கறையுடன் 20றுத்தல கல் கிடந்தது"

(ஊர்காவற்றுறை)

''மாமா மேலே பார்த்தபடி கிடந்தார். அவர் பக்கத்தில் 20 றுத்தல் மதிக்கக்கூடியஇரத்தக் கறையுடன் ஒரு கல் கிடந்தது'' இவ்வாறு சரவணை மேற்கு செல்லையா கொலை வழக்கில் சாட்சியமளித்த இறந்தவரின் மருமகன் இரத்தினம் திருவாதவூரன் .

இவ் வழக்கில் சரவணை மேற்கைச் சேர்ந்த கனகசபை செல்லையா என்பவரை வேண்டும் என்று கல்லால் தாக்கி கொலை செய்ததாக சரவணையை சேர்ந்த செல்லன் மனேரஞ்சிதம் மடித்தீன் இராசு என்பவர்கள் ஊர்காவற்றுறை பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவ் வழக்கின் ஆரம்ப விசாரணை ஊர்காவற்றுறை மாவட்டநீதிமன்றில் நீதிபதி திரு. ரி. கே. லகன் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது. ஊர்காவற்றுறைப் பொலிஸார் வழக்கை நடத்தினர். இறந்தவரின் நலனைக் கவனிக்க சட்

[8-ம் பக்கம் பார்க்க]

## ரூபவாஹினியில் தோன்றுவார்

[யாழ்ப்பாணம்]

''ரூபவாஹினி'' தொலைக்காட்சியில் 20ந்திகதி செவ்வாய்க்கிழமை இரவு 9.45 மணிக்கு போல் திலகநாயகத்தின் பாட்டுக் கச்சேரி இடம்பெறுகின்றது பக்கவாத்தியமாக ரி. வி. பிச்சையப்பா வயலினும், ஏ. எஸ் ராமநாதன் மிருதங்கம், செல்வன் ஆர் யோகராசா கடமும் வாசிக்கிறார்கள்.

## மாமறை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

டுகள் 29, 29 நோன்புகளே கிடைத்தன. எண்ணிக்கையில் இருபத்தெகன்பதாக ரமழான் முடிவுற்றாலும் நன்மையில் முப்பது நாட்களை போன்றதேயாகும். ஆதாரம்- ''தகாயிருள் இக்வான்'')

சீரும் சிறப்புமிக்க ரமழான் மாதத்தை நமக்கு அளித்த இறைவன் அம்மாதத்தில் ஓர் இரவையும் நமக்கு அளித்துள்ளான். அந்த இரவுதான் ''லைலத்துல் கத்ரு'' எனும் மாமறை போற்றும்மகத்தான இரவு. அந்த இரவின் சிறப்புக்களைம்பற்றி 'அல் கத்ரு'எனும் அத்தியயத்தில் நிச்சயமாக நாம் அல்குர்ஆனை மகத்தான இரவில் இறக்கினேம். அந்த மகத்தான இரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறந்ததாகும். அந்த இரவில் மலக்குகளும், ஜிப்ராயிலும் தங்களது இறைவனின் அனுமதியின் பேரில் சகல காரியங்களை முன்னிட்டும் இறங்குகின்றனர். (அவ் இரவு முழுதுமாக)சாந்தி நிலவியிருக்கும். அதுஅதிகாலை வரையில் நீடிக்கும் என்று இயம்புகின்றான். அல்லாஹ் தனது அருள் மறையாம் குர்ஆனை 'லைலத்துல் கத்ரு' இரவில் லவ்ஹுல் மஹ்பூல் என்னும் பலகையிலிருந்து முதல் வானத்திலுள்ள பைத்துல் இஜ்ஜத் என்ற இடத்திற்கு முழுமையாக இறக்கி வைத்தான். அங்கிருந்து சர்தர்பத்திற்கு ஏற்றவாறு கொஞ்சம் கொஞ்சமாக 23 ஆண்டுகளில் இறை தூதர் (ஸல்) அவர்கள் மீது இறக்கி வைத்து பூர்த்தி செய்தான்

எனவே முஸ்லீம்களாகிய நாம் இந்த இரவில் நல்லமல்கள் புரிந்து விசேடமாகத் தொழுகைகள், குர்ஆன் ஓதல் ஸகாத் கொடுத்தல், ஏழைகளின் மீது அன்பு காட்டி, நோன்பாளிகளுக்கு நோன்பு திறக்க உணவளித்து, இம்மாதத்தின் சிறப்பான நன்மைகளைப் பெற்றுக் கொள்ள நாம் எந்நேரமும் முயற்சிசெய்வோமாக. ஆமீன்.

நன்றி ரஹ்மத்)

தொகுத்தெழுதியவர்:-

**ஏ. ஜெ. எம். ஹில்மி**

## சிறுமி மீது பலாத்காரம் செய்தாராம்

[பண்டதரிப்பு]

கடைக்குச் சாமான் வாங்கச் சென்ற 1 வயதுச் சிறுமி வாலிபர் ஒருவரினல் பலத்தகாரம் செய்யப்பட்டாராம். இச் சிறுமி சிகிச்சைக்காக யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச் சிறுமி கடைக்கு சாமன் வாங்கச் சென்ற சமயம் வாலிபர் ஒருவர் அவரைக் கடத்திச் சென்று அவர் மீது பலாத்காரம் புரிந்ததாக யாழ் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப் பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

யாழ் ஆஸ்பத்திரி பொலி பிரிவினர் இது பற்றி விசாரர நடத்தி வருகின்றனர். (அ)

## சைவ மலர்ச்சி விழா

[யாழ்ப்பாணம்]

கீரிமலை சிவ நெறிக்கழகத்தினர் நடாத்தும் சைவமறுமலர்ச்சிவிழா நாளை திங்கட்கிழமை கீரிமலை நகுலேஸ்வரர் திருக் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது.

இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் வித்துவான் சி. ஆறுமுகம், வித்துவான் இ. திருநாவுக்கரசு, திருச. விநாயகமூர்த்தி ஆகியோர் செற்பொழிவாற்றவுள்ளனர்:

## "புராண இதிகாசங்களைப் போற்றிப் பேணவேண்டும்"

(கிளிநொச்சி)

''தமிழ் மக்களின் பாரம்பரிய கலை, கலாசாரம் பேணப்படவேண்டும். எதிர்காலச் சந்ததியின் நல்வாழ்விற்காக எம்மை அர்ப்பணிக்கவேண்டும்'' என்று கிளிநொச்சி கொத்தணிப் பாடசாலை முதல்வர் இரா. சின்னத்தம்பி கனிஷ்ட மகாவித்தியாலய கலை அரங்கில் நடைபெற்ற கொத்தணிப் பாடசாலைகளின் தமிழ் இலக்கிய தின விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

கொத்தணி அமைப்பின் செயலாளர் திரு ஏ. கே. இராசேந்திரத்தினல் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ்விழாவில் திரு. சின்னத்தம்பி மேலும் பேசுகையில், 'மறைந்துவரும் தமிழ்க்கலைக்குப் புத்தாக்கம் அளிக்கப்படவேண்டும். புராணங்களும் இதிகாசங்களும் போற்றிக் காக்கப்படவேண்டும். இந்தப் புனிதமான பெரும்பணியைப் பாடசாலைகள்மேற்கொள்வதுடன் மாணவர்களுக்கான அதிசிறந்த பயிற்சித்திட்ட மொன்றையும் உருவாக்கவேண்டும். இந்த வகையில் கொத்தணிப் பாடசாலைகள் பாடுபடும்'' என்றார்.

இவ்விழாவில் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளுடன் ஆசிரியர்களின் விவாத அரங்கும் இடம்பெற்றது. அதில் கனகாம்பிகைக் குளம் வித்தியாசாலை கனிஷ்ட மகாவித்தியாலயம், முதலாம்தர மகாவித்தியாலயம், கனகபுரம் மகாவித்தியாலயம், திருவையாறு பாடசாலை ஆகியன பங்குபற்றின, (அ)

## காந்திரூபன் ச. ச. நிலைய வெள்ளி விழா

[யாழ்ப்பாணம்)

சுன்னுகம் காந்திரூபன் சனசமூகநிலைய வெள்ளிவிழா இன்று ஞாயிறு மாலை யாழ் மாவட்ட அபிவிருத்திசபை உபசெயலாளர் திரு. பி பாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

வடபகுதி மக்கள் விடுதலை முன்னணி அமைப்பாளர் திரு. சிங்கமாப்பாணர், மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு ஆ. நடராசா, எழுத்தாளர் திரு. கே.டானியல் உட்படபலர் உரையாற்றுவர்.

[மா]


## விற்பனைக்கு

1. 24 ஸ்ரீ 5967 இசுசு லொறி
2. 24 ஸ்ரீ 3508 லொறி
3. 2 ஸ்ரீ 3095 மோட்டார் கார்
4. 35 ஸ்ரீ 595 வான்
5. 23 ஸ்ரீ 1756 பஸ்

மேற்கூறப்பட்ட வாகனங்களுக்கான விண்ணப்பங்கள் 22-07-82 ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விபரங்களுக்கு:-

சட்ட அதிகாரி,

**த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,**

TFC

249. மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். போன்: 7680

# "கடந்த ஒரு நூற்றுண்டில் பரதக்கலை வளர்ந்துள்ளது"

## -- பேராசிரியர் இந்திரபாலா

[அரியாலை]

''கடந்த ஒரு நூற்றுண்டு காலத்தில் பரதக்கலை மிகவும் வளர்ச்சியடைந்திருப்ப தோடு உலகின் பல பாகங்களிலும் வாழும் பல்வேறு இன மக்களும் இக்கலையைப் பயிற்றி வளம்படுத்தி வருகிறுர்கள். விசேடமாக ராம் கோபால், உதயசங்கர் போன்ற பலர் இக்கலையை மிகவும் நுணுக்கமாகக் கற்றுத் தாமே ஆடி இக்கலையை வளர்த்துவருகிறுர்கள்''

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக நுண்கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் கா. இந்திரபாலா யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நடன அரங்கேற்ற விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

கொக்குவில் கலாபவன நடனக் கல்லூரியின் ஆசிரியையான திருமதி. சாந்தினி சிவநேசனின் மாணவர்களான செல்வி கௌரி, செல்வன் ரமணன் ஆகியோரின் நடன அரங்கேற்றத்தில் பேராசிரியர் க. இந்திரபாலா, கலந்துகொண்டு மேலும் பேசுகையில், ''பரத நாட்டிய வளர்ச்சியில் பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் தமது பங்களிப்பைச்செய்ய வேண்டுமென்ற எண்ணம் இன்று வளர்ந்துவருவது பாராட்டுதற்குரியதாகும். இந்த அரங்கேற்றம் முதற்படியாக அமைந்தாலும், இக்கலையைத் தொடர்ந்து இவர்கள் கற்று இதனை மேலும் வளம்படுத்த வேண்டும்.'' என்று குறிப்பிட்டார்.

விழாவிற்குத் தலைமை வகித்த வைத்திய கலாநிதி கே. சிவஞானரத்தினம் பேசுகையில், கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்து ஆலயங்களிலே 'சதிர்'க் கச்சேரிகள் நடைபெற்றுவந்ததை நினைவுபடுத்தி இன்று நடனக் கலை அடைந்திருக்கும் முன்னேற்றம் பற்றிக் குறிப்பிட்டார்.

கல்விப் பணிப்பாளர் திரு. ரி. மாணிக்கவாசகர் பேசுகையில் கூறியதாவது:

''ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பல்லவர் காலத்தில் இந்து மக்கள் நாகரீகம் படைத்தவர்களாக விளங்கினர். இவர்கள் 'லிங்க' வழிபாட்டைக்கைக்கொண்டு வந்தார்கள்.

இன்று இளைஞர்கள் தமது நேரத்தைத் தகாத வேலைகளைச் செய்வதிலேயே கழிக்கிறுர்கள். இதனை அவர்கள் விடுத்து இதுபோன்ற ஆக்க வேலைகளைச் செய்வதில் தமது கவனத்தைச் திருப்ப வேண்டும். இன்றைய பிள்ளைகள் பெற்றேரை, ஆசிரியர்களை, தலைவர்களை மதிக்கிறுர்கள் இல்லை. இளைஞர்களிடையே நல்ல பண்பையும், கடமையுணர்வையும், கட்டுப்பாட்டையும் பெற்றேர்களும் ஆசிரியர்களும் வளர்க்க வேண்டும். இதன் மூலமே நல்ல இளைஞர் சமுதாயத்தை நாம் கட்டி வளர்க்க முடியும்.''

[அ]

## வன்னியிலும்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சி [சிறிமாபிரிவு] அபேட்சகரை நிறுத்த முடிவு செய்துள்ளது.

தேர்தல் பிரசார வேலைகளில் சுதந்திரக் கட்சியினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். கட்சி வவுனியா மாவட்டத்தில் கிராமிய கிளைகளை நிறுவி வருகின்றது.

[க]

## ஜனுதிபதி...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

வர் கலாநிதி ஏ.ஜே. வில்சன் ஆவார்.

கலாநிதி நீலன் திருச்செல்வமே எதிர்க்கட்சி முதல்வருடன் சென்று ஜனுதிபதியைச் சந்தித்திருந்தார் என இம்மாதம் 1ம் திகதி வெளியான செய்தி தவறுனதென சட்டத்தரணி திரு எஸ். நவரத்தினம் [கரிகாலன்] அறிவித்துள்ளார்.

அத்துடன் சந்தேக நபர்களான குட்டிமணி, தேவன், ஜெகன் ஆகியோருக்கு அளிக்கப்படும் உணவு, குளிக்கும் வசதி ஆகியன தொடர்பாகவும் கலாநிதி ஏ ஜே வில்சன் இவ்வாரம் ஜனுதிபதியைச் சந்தித்துமுறையிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தள்ளார். (சி

# யாழ். மருத்துவ பீடத்திற்கு சித்தவைத்தியத்துறையில் அக்கறையில்லை! அமிர் கவலை

(ஏ வி. மாணிக்கம்)

''யாழ். பல்கலைக்கழகமருத்துவ பிரிவுக்கு சித்தவைத்தியத்துறையில் அக்கறையில்லை. இதனுல் நாங்கள் இதில் அக்கறை கொள்ளாமல் இருக்க முடியாது. தமிழர்களுக்கு சித்தவைத்தியமுறை அத்தியாவசியமானது''.

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் யாழ்: மாவட்ட அபிவிருத்திசபையின் மாதாந்தப் பொதுக் கூட்டத்தில், பிரேரணை ஒன்றின் மீது பேசுகையில் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்டு, திரு. மு. ஆலாலசுந்தரம், திரு. வி. தர்மலிங்கம் ஆகிய மூன்று எம். பி.க்களும், ஏழு அபிவிருத்தி சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

திரு. க. தம்பிமுத்து பிரேரணையை கொண்டுவந்தார்.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில், மேலைத்தேச மருந்து வகைகளின் விலைகள் அதிகரித்துள்ளதால் ஏழைமக்களுக்குநாட்டுவைத்தியம்தான் கைகொடுத்து வருகிறது என்றும் சித்தவைத்தியத்துறைக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவப் பிரிவின் உதவியைப்பெறுவதற்கு, பல்கலைக்கழக உபவேந்தரோடு ஆலோசித்து ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்.

வைத்திய கலாநிதி ஆ. நடராசா: கடந்த ஜனவரி மாதம் இதேபிரேரணை கொண்டுவரப்பட்டது. அதை செயல்படுத்த வேண்டும். இப் பிரேரணை தேவையற்றது.

திரு. அமிர்தலிங்கம்: அதற்கு ஒரு உபகுழு தெரிவு செய்யப்பட்டது. செயலாளர் இல்லாதபடியால், அந்தச் செயற்குழு செயல்படமுடியாமல் இருந்தது. யாழ். செலக திட்டமிடல் உத்தியோகத்தர் திரு. கே. சிவலிங்கம் என்பவரை செயலாளராக நான் பிரேரிக்கின்றேன். இந்த நியமனத்தை சபைஏற்றுக்கொண்டது.

### நிர்வாக இயந்திரம் இல்லை

தலைவர்: திரு. சு. நடராசா: நிர்வாக இயந்திரம் எமது கையில் இல்லை. குழுக்களை நியமிக்கலாம், ஆனல் அக் குழுக்களுக்கு லிகிதர், சுருக்கெழுத்தாளர் வேண்டுமே! இன்றிருக்கும் நிலையில் பண வசதியின்மையால் பொறுப்பு வாய்ந்த தீர்மானங்களைச் செயல்படுத்த முடியாமலிருக்

(7-ம பக்கம் பார்க்க)

## ஸ்கந்தா அ.சபை இன்று கூடுகிறது

[அரியாலை]

சுன்னுகம் ஸ்கந்தவரோதய கல்லூரி அபிவிருத்திச்சபையின் விசேட பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில்கல்வி அமைச்சால் அனுப்பப்பட்ட சுற்று நிருபத்தின் பிரகாரம் அபிவிருத்திச் சபையின் கட்டமைப்பிலும், செயல்பாட்டிலும் பல மாற்றங்கள் செய்யப்படவிருக்கின்றன.

# போலி இரகசிய பொலிஸ்காரருக்குப் பிணை

(மாவிட்டபுரம்)

இரகசிய பொலிஸ் உத்தியோகத்தராக நடித்த போது பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிசில் ஒப்படைக்கப்பட்ட நபர் தந்தையின் பொறுப்பில் பிணையில் விடப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழையையடுத்த வீமன்காமத்தில் வீடொன்றுக்குச்சென்று தான் இரகசியப் பொலிஸ் உத்தியோகத்தர் எனக் கூறிய கொல்லங்கலட்டியைச்சேர்ந்த அரியநாயகம் பவளராஜா என்னும் நபர் அங்கு விசாரணைகளை ஆரம்பித்த சமயம் அவரை இனம் கண்ட பொதுமக்கள் அவரைப் பிடித்து காங்கேசன்துறை பொலிசில் ஒப்படைத்தனர்.

இவர் குறித்து பொலிசார் நடத்திய விசாரணைகளின் போது இவர் இவ்வாறு நடந்துகொண்டதற்கு தப்பான எண்ணம் எதுவும் இருக்கவில்லையென தெரியவந்தது.

இதனையடுத்து தந்தையின் பொறுப்பில் பிணையில் செல்ல பொலிசார் அனுமதித்தனர்.

## குருநகர் யாகப்பர் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பெருவிழா நேற்று முன்தினம் மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது, இவநாட்கள் தொடர்ந்து 9 நாட்கள் நடைபெறும்.

இத்திருவிழாவில் சென்னையிலிருந்து அங்குள்ள பூங்காப் பங்கில் பணிபுரியும் அருட்திரு தேவநேசன் அடிகளார் மறையுரை ஆற்றுவதற்கு விசேஷமாக வருகைதந்துள்ளார்.

எதிர்வரும் 24ம் திகதி சற்பிரசாத சுற்றுப்பிரகாரம் நடைபெறும்,

25ம் திகதி காலை திருநாட்பாடற்பூசை ஒப்புக்கொடுப்பதுடன் அன்று மாலை குருநகரின் அலங்கரிக்கப்பட்ட வீதிகள் வழியாக சொரூப பவனியும் இடம்பெறும். (சி)

## இலங்கையிலுள்ள நூலகங்கள்பற்றிய மதிப்பீடு யுனெஸ்கோ மேற்கொண்டுள்ளது

[புலோலி]

யுனேஸ்கோ நிறுவனம் இலங்கையிலுள்ள பொது நூலகங்கள் பற்றிய மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டுள்ளது. யுனெஸ்கோ நிறுவனத்தின் கோரிக்கையையடுத்து இலங்கை தேசிய நூலக சேவைகள் சபை இந்நடவடிக்கையிலீடுபட்டுள்ளது.

1980ம் ஆண்டு இலங்கையில் இருந்த பொதுசன நூலகங்கள் பற்றிய விபரங்களடங்கிய தரவுகளை இயன்றளவு சரியாகத்தரும்படி யுனெஸ்கோ நிறுவனம் இலங்கை தேசிய நூலக சேவைகள் சபையைக் கோரியுள்ளது.

1980ம் ஆண்டு இலங்கையில் இருந்த நூல் நிலையங்களில் கடமையாற்றிய நூலகர்களின் பதவிகள், தராதரங்கள், நூலகத்தில் இருந்த நூல்களின் எண்ணிக்கை பருவவெளியூடுகளின் எண்ணிக்கை, நூலக அங்கத்தவர்களின் எண்ணிக்கை, நூலகங்களுக்கான வருடாந்த செலவுகள், நூலக சேவை விஸ்தீரணம் போன்ற விபரங்கள் பற்றி அதில் கேட்கப்பட்டுள்ளன.

பொது நூலகங்களின் நூலகர்கள் இவ்விபரங்களை இலங்கை தேசிய நூலக சபைக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

[க]

## தொண்டமனுறு கி. உ. சபைத் தலைவர்



தொண்டமானுறு கிராமோதய சபைத் தலைவராக தொண்டமானுறு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. ரீ. துரைரத்தினம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# மண்டைதீவுக்கடலோரம் சிரமதானமூலம் அணைக்கட்டு

[மண்டைதீவு]

யாழ். மாவட்டஅபிவிருத்தி சபையின் முதலாவது ஆண்டு நிறைவை யொட்டி தீவுப் பகுதியெங்கும் அவ்வட்பகுதி கிராமசேவை அலுவலர் பகுதிகளில் சிரமதான வேலைகள் நடைபெற்றன.

இச் சிரமதானப் பணியின் விசேஷ அம்சமாக மண்டைதீவு கிழக்கு கடற்கரையோரத்தில் பாரிய அணைக்கட்டுவேலைகளும் பூம்புகார்வீதி அமைத்தல் வேலைகளும் இடம்பெற்றன.

சிரமதானவேலைகள் ஆரம்பமாவதற்கு முன்புகரையோரத்திலுள்ளகண்ணகிஅம்மன்ஆலயத்தில் விஷேச பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. தொடர்ந்து காவலூர் எம்.பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் யாழ் மாவட்ட அபிவிருத்திசபையின் நந்திச்சின்னம் பொறிக்கப்பட்ட கொடியை ஏற்றிவைத்தார். தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. நகராசா தேசியக் கொடியை ஏற்றிவைத்து சிரமதான வேலைகளை ஆரம்பித்துவைத்தார்.

இப்பகுதியில் வசிக்கும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் கலந்து கொண்டதோடு இப்பகுதிப் பொது ஸ்தாபனங்கள் தங்கள் ஸ்தாபனங்களின் சின்னக்கொடிகளை நாட்டி சிரமதானத்தில் பங்கு கொண்டன.

ஐம்பதுக்கு மேற்பட்ட மாட்டுவண்டிகளும், டிரக்டர்களும் மண்ணை ஏற்றிப்பறிக்கும் வேலைகளில் ஈடுபட்டிருந்தன.

சிரமதானத்தில் பங்கு பற்றியவர்களுக்குஇப்பகுதிகிராம சேவை அலுவலர் திரு. எஸ். சிறிபாலன் கிராமோதயசபை தலைவர் திரு நா. இராசலிங்கம் ஆகியோர் சர்க்கரைப் பொங்கல் வழங்கினுர்கள்.


மீண்டும் மலிவு விற்பனை!

யாழ்ப்பாண மக்களின் அபிமானம் பெற்ற நிறுவனம்

★ மின்சார உபகரணங்கள் ★ பாடசாலை உபகரணங்கள்

★ வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் பரிசுப் பொருட்களுக்கு

கெமிவிக்ஸ் - பைன்டர்கம் விநியோகஸ்தர்

அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கை தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உத்தரவுபெற்ற வியாபாரிகள், மின்சார ஒப்பந்தகாரர்) கடைத்தெரு பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8291

தலைமையகம்:

பேர்ள்லெட்ஸ் அம்பலவாணர் & சன்ஸ்

78, மலிபன் வீதி, கொழும்பு - 11

தொலைபேசி: 24821 — 28244

லெட்சுமி பவான்

97, ஒல்கொட் மாவத்தை

கொழும்பு-11

போன்: 24821

# இன்று மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா

[அரியாலை]

தொல்புரம் மத்திய கொட்டடிப்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலயஆயிரத்தெட்டு சங்காபிஷேகம் நடைபெற்று மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா இன்று ஞாயிறு நடைபெறுகிறது. நண்பகல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

இரவு ஊஞ்சல் பாட்டுடன் அம்பாள் வீதிவலம்வருவாள்.


ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் - விஜயா
நல்லநேரம்
[புதிய பிரதி]

2-வது வாரம்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்-ஸ்ரீதேவி
குரு (கலர்)


## யாழ். பரியோவான் கல்லூரி

# மெய்வல்லுநர் போட்டியில் ஹண்டி இல்லம் முதலிடம்

(அரியாலை)

யாழ் பரியோவான் கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் ஹண்டி இல்லம் 263புள்ளிகளைப்பெற்று சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. ஏனைய இல்லங்களான தொம்சன், பீற்றேர, யோண்சன், பாகிற்றர் இல்லங்கள் முறையே 260, 191, 175, 170 புள்ளிகளைப் பெற்று இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் இடங்களைப் பெற்றன.

13 வயதுக்குட்டட்ட பிரிவில் பீற்றேர இல்லத்தைச் சேர்ந்த செல்வன் டி. ஈ. சி. பிலிப்ஸ்சும், 14 வயதுக்குட்பட்ட பிரிவில் தொம்சன் இல்லத்தைச் சேர்ந்த செல்வன் வி. பாலமுரளியும், 15வயதுக்குட்பட்ட பிரிவில் பீற்றேர இல்லத்தைச் சேர்ந்த டி. என். தேவப்பிரியனும், பாகிற்றர் இல்லத்தைச் சேர்ந்த வை. பசுபதியும், 16 வயதுக்குட்பட்ட பிரிவில் தொம்சன் இல்லத்தைச் சேர்ந்த என். பகீரதனும், பீற்றேர இல்லத்தைச் சேர்ந்த யே.எம். ஜோச்சும், 17வயதுக்குட்பட்ட பிரிவில் பாஜிற்றர் இல்லத்தைச் சேர்ந்த பி. குணனந்தனும், 19 வயதுக்குட்பட்ட பிரிவில் ஹன்டி இல்லத்தைச் சேர்ந்த யே. எம். யோசேப்பும் சம்பியன் வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

### புதிய சாதனைகள்

16 வயதுக்குட்பட்ட பிரிவில் தொம்சன் இல்லத்தைச் சேர்ந்த என். பகீரதன் குண்டெறிதல் போட்டியில் 31 அடி 11 அங்குலம் எறிந்தும், 17 வயதுக்குட்பட்ட பிரிவில் யோன்சன் இல்லத்தைச் சேர்ந்த யே. கதிர்காமநாதன் கெந்தி மிதித்துப்பாய்தல் போட்டியில் 37 அடி 9அங்குலதூரம் பாய்ந்தும் 19 வயதுக்குட்பட்ட பிரிவில் ஹண்டி இல்லத்தைச் சேர்ந்த யே, எம். யோசேப், நீளப் பாய்தல் போட்டியில் 18 அடி 5½ அங்குல தூரம் பாய்ந்தும், 16 வயதுக்குட்பட்ட பிரிவில் பீற்றேர இல்லத்தைச் சேர்ந்த யே. எம். யோசேப் 200மீற்றர் தூரத்தை 26 செக்கனில் ஓடியும், 17 வயதுக்குட்பட்ட பிரிவில் பீற்றேர இல்லத்தைச் சேர்ந்த ஆர். நஞ்சிற்செல்வேந்திரன் 400 மீற்றர் தூரத்தை 57 செக்கனில் ஓடியும், 19 வயதுக்குட்பட்ட பிரிவில் ஹண்டி இல்லத்தைச் சேர்ந்த கே. தர்மசீலன் 100 மீற்றர்தூரத்தை 12·1 செக்கனில் ஓடியும் புதிய சாதனைகளை நிலைநிறுத்தினர். (அ)

## யாழ். மருத்துவ...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. சபைக்குரிய தொழிலகம் இல்லை: கருமங்கள் ஆற்ற வசதி வாய்ப்பில்லை அபிவிருத்தி சபைகளைப்பற்றி மந்திரிகள் எம் பி.க்களே சர்ச்சைக்குள்ளாகியுள்ளார்கள்.

### சிம்மாசனமும் செங்கோலும்

திரு. மு. தம்பிமுத்து: சிங்காசனத்தையும், செங்கோலையும் உணடாக்கிய தலைவர் நிர்வாக இயந்திரத்தையும் கொண்டு வரவேண்டும். யாழ். செயலகம் முன்பு திறமை வாய்ந்ததென்றுபெயர் பெற்றது. அதுபோல் அரசாங்கம் உதவி செய்யாவிட்டாலும் நாங்கள் அபிவிருத்தி சபையை செயல்படுத்தவேண்டும்.

தலைவர் திரு. சு. நடராசா: இந்தத் தீர்மானம் பின் போடப்பட்டுள்ளது.

மற்றும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.



# அருட்செல்விக்கு வெள்ளி விழா

தோன்றிற் புகழோடு தோன்றுக- அஃதிலார் தோன்றிலும் தோன்றாமை நன்று'' என்றபொய்யாமொழிக்கேற்ப பொய்யான இவ்வுலக வாழ்வைத் துச்சம் எனத் துறந்து சீரிய துறவுவாழ்வைத் துணைக்கொண்டிருக்கும் அருட் சகோதரி ஸ்ரனிஸ்லஸ் மேரி (அ கா) யின் துறவு வாழ்வின் 25வருட வெள்ளி விழா கொண்டாடப்படுவது அறம் போற்றும் அனைத்துள்ளங்களுக்கும் மகிழ்ச்சியான செய்தியாகும்.

புகழ்பூத்த வைத்தியர்களைத் தனகததே கொண்ட சில்லாலையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்சகோதரி பெயர் பெற்ற வைத்திய பரம்பரை விருசுப்பிள்ளை தம்பதிகளின் கடைசிப்புதல்வியாவார். ''வளரும் பயிரை முளையிற் தெரியும்'' என்பதுபோல் இளமையிலேயே தேவன் பால் தீவிரபற்றும் தியாக சிந்தையும் நிரம்பப்பெற்ற அருட் சகோதரி ஸ்ரனிஸ்லஸ் மேரி இளமைக்கல்வி முழுவதையும் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் கற்றுமுடித்த பின் சில காலம் ஆசிரியையாகப் பதவியேற்றுப் பணியாற்றியதுடன் கார்மேல் சபைத்துறவியானர்.

ஆசிரியத் தொழிலுக்கு ஒரு அணிகலனக கடந்த 25 வருடங்களிலும் பல்வேறு பாடசாலைகளிலும் கல்விப்பணி ஆற்றிப்பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் மனதில் இடம் பெற்றுக் கொண்டதோடு, ஏனைய ஆசிரிய உலகிற்கும் ஒரு எடுத்துக்காட்டாக திகழ்ந்து வரும் சகோதரி பலபாடசாலைகளிலும் ஆசிரியையாகவும், அதிபராகவும் பணியாற்றி அவ்வப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அயராது பாடுபட்டவர். 10 வருடங்கள் யாழ். புனித ஜோன் பொஸ்கோ பாடசாலையிலும், 3 வருடங்கள் மட்டுநகர் கார்மேல் பாடசாலையிலும் 5வருடங்கள் அச்சுவேலி புனித தெரேசா பாடசாலையிலும் அதிபராகக் கடமையாற்றிய பின் தற்பொழுது நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் பாடசாலையின் அதிபராக்கடமையாற்றி அப்பாடசாலையின் துரிதவளர்ச்சிக்கு அருப்பணியாற்றி வருகிறார்.

செபமும், சேவையும் என்ற கார்மேல் சபையின் சீரியகுறிக்கோளுடன் இவர் தம் துறவு நாட்களை இறைவனுக்கு உகந்த முறையில் அர்ப்பணம் செய்வதையிட்டு இவர் சார்ந்துள்ள கார்மேல் சபையோடு இணைந்து நாமும் உவகையும் பெருமையும் கொள்கின்றோம். இவரது சேவை நலம் பற்றியும், துறவு வாழ்வின் தூய்மையை போற்றியும் கார்மேல் சபை மண்டபத்திலும், இவரது பாடசாலையிலும் நன்றித் திருப்பலிப் பூஜைகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. இம்மாதம் 31ம் திகதி காலை 7மணிக்கு சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் நன்றித் திருப்பலி நடம்பெறும். அன்னார் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து இறைபணியும் கல்விப்பணியும் ஆற்றுவதற்கு பிரார்த்திப்போம்.

## தபாற்பெட்டியின்றி மக்கள் கஷ்டம்

[அரியாலை]

யாழ். பலாலி வீதியில், இராமநாதன் வீதி சந்திக்கு அண்மையில் பழுதடைந்திருந்த தபால் பெட்டி தபால் திணைக்களத்தினரால் திருத்துவதற்காக எடுத்துச் செல்லப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை மீண்டும் இத்தபாற்பெட்டி உரிய இடத்தில் பொருத்தப்படவில்லை. இதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் கஷ்டமடைந்து வருகின்றனர். [அ]


றீகல் [யாழ்நகர்] தினசரி; 10-30, 2-30, 6-15, 9-30
20-7-82வரை சிவாஜி நடித்த
மோகனப் புன்னகை (கலர்)
அடுத்தவெளியீடு 'கயலும் கயரும்' (மலையாளம் கலர்)

சாந்தி. (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
9-வது பரபரப் பூட்டும் கடைசி வாரம்!
கமல் (இரட்டைவேடம்) சுஜாதா, அம்பிகா,
கடல் மீன்கள்
—கலர்—

ராணி (யாழ் நகர்) 2-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
75வது வெற்றித் திருநாளை நோக்கி
கார்த்திக்-ராதா- தியாகராஜன்
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
SILVER DREAM RACER

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
கமலஹாசன்
ராஜபார்வை

Windsor (Jaffna) Last Few Days
Daily 10-30, 2-00, 4-30, 7-00 and 9-30 P. M.
BRUCE LEE in
THE GAME OF DEATH
(Color)
உலக சாம்பியன் புருஸ்லியின் பயங்கரமான கராட்டி சண்டைகள் நிறைந்த படம்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 4-30, 7-00, 9-30
Sat. Sundays 2-00 p. m.
Escape of the Birdmen

ராஜா தினசரி 4காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
இன்று மட்டும்
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]
FROM 19 - 07 - 82
CALIFORNIA SUITE (Color)


# நைஜீரியா செல்லும் சண்முகதாஸுக்கு பாராட்டு

[புலோலி]

''யாழ். பல்கலைக்கழகத்தின் மிகமுக்கியமானவர்களில் ஒருவரான கலாநிதி அ. சண்முகதாஸ் வெளிநாடு செல்வது எம்எல்லோருக்கும் வருத்தமே ஆயினும் அவர் உயர்வடைவதை எண்ணி மகிழ்கிறோம். வடமராட்சிப்பகுதியில் பல்வேறுதுறைகளின் அபிவிருத்திகளுக்கும், மக்களுக்கும் அளப்பரிய சேவைகளை வழங்கி வரும் வீரவாகுவுக்கு அகில இலங்கைச் சமாதானநீதவான் பதவி வழங்கப்பட்டது மிகப் பொருத்தமான தாகும்.''

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி அ. சண்முகதாஸ் நைஜீரியா பல்கலைக்கழகத்தில் அதிதித் துணைப்பேராசிரியராகவும், ஜப்பான் கைக்கியுசின் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிக்காகச் செல்வதையிட்டும் திரு. மு. பொ. வீரவாகு அகில இலங்கைச்சமாதான நீதவானக நியமிக்கப்பட்டதையிட்டும் இருவரையும் கௌரவிக்கும் முகமாக அகில இலங்கை கம்பன் கழகத்தால் நடாத்தப்பட்டபாராட்டு விழாவில் உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக விலங்கியல்துறைப்பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் குறிப்பிட்டார். யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் திரு. எஸ். நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தொடர்ந்து உரையாற்றியபேராசிரியர் கணேசலிங்கம் குறிப்பிட்டதாவது.

கலாநிதி சண்முகதாஸ் வெளிநாடு செல்வது எமது மாணவர்களுக்கும் பெருங்குறையாகும். ஆனல் அவர் வெளிநாடுசெல்லவிரும்புகிறார் அவரது விருப்பம் நிறைவேறி அவர் உயர்வடையவேண்டுமென்பது எமது பேரவா.

திரு வீரவாகு வடமராட்சி கல்விவட்டத்தின் தலைவராக இருந்தும் பருத்தித்துறை நகரசபை உறுப்பினராக இருந்தும் சமுதாயத்திற்கு அளப்பரிய சேவைசெய்து வருவதைச் சகலரும் அறிவார்கள இவர் போன்றோருக்குச் சமாதான நீதவான் போன்ற கௌரவ பதவிகள் வழங்கப்படும்போது அப்பதவிகளே சிறப்புப்பெறுகின்றன.

இளைப்பாறிய யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. இ. சபாலிங்கம், யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத்தலைவர்திரு. இராசநாயகம் யாழ் உள்நாட்டுவர்த்தக உதவி ஆணையாளர் திரு. ரீ. மார்க்கண்டு வட்டாரக்கல்வியதிகாரி திரு பி. சச்சிதானந்தம், உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் வித்துவான்க. ந. வேலன் தேவன் ஆசிரியர் சிவா கிருஷ்ணமூர்த்தி சட்டத்தரணி ஆர் உருத்திரா கவிஞர் காரைசுந்தரம்பிள்ளை, கவிஞர் குமரன் உட்படஇன்னும் பலர் பாராட்டுரை வழங்கினர்.

# 50 ஆயிரம் ரூபா வள்ளம் கோடரியால் கொத்திச்சேதம்!

(மன்னர்)

பேசாலை - நடுக்குடா கடற்கரையில் இழுத்து வைக்கப்பட்டிருந்து சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வள்ளம் ஒன்று இனம் தெரியாத நபர்களால் கோடரியால் கொத்திச் சேதமாக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் பேசாலையைச் சேர்ந்த நவரத்தினம் பெர்னண்டோ என்பவரின் வள்ளமே சேதமாக்கப்பட்டதாகும்.

அண்மைக்காலத்தில் பேசாலை, தாழ்வுட்பாடு ஆகிய இரு கிராமங்களுக்குமிடையே இடம்பெற்று வரும் மோதல்களின் எதிரொலியாகவே இவ்வள்ளம் சேதமாக்கப்பட்ட்ருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி மன்னர் பொலிசில் புகார் செய்யப்பட்டதையடுத்து மன்னர் பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (அ)

## அலங்கார ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

லாம்.

வீதியின் இருமருங்கும் தென்னை, டனை வாழை மரங்கள் வரவேற்பு கூறு வாசங்களில் காணப்படுகின்றது.

சிலை அமைக்கப்பட்ட இடத்தில் புடைசூழ பெரும் திரளான மக்கள் கூடியிருந்தனர்.

கம்பீரமான தோற்றத்துடன் நெற்றியில் திருநூற்று பூச்சும் சந்தனப்பொட்டுடன் வீரத்தோற்றத்துடன் காணப்பட்டது பண்டார வன்னியன் சிலை:

யாழ் -கண்டி பிரதான வீதியில் மாவட்ட சபை அலுவலகத்தின் முன் நிறுவப்பட்ட பண்டாரவன்னியன் சிலையை வவுனியா எம்.பி. திரு. சிவசிதம்பரம் தமிழரின் பராம்பரிய நாதஸ்வரம் ஒலிக்க திரை நீக்கம் செய்து வைத்து மலர் அஞ்சலி செலுத்தினர்.

சிலைதிறப்பு விழாவில் பிரதம விருந்தினராக வருகை தந்த சபாநாயகர் அல்ஹாஜ் எம். ஏ. பாக்கீர் மாக்கார் வவனியா எம் பி திரு தா. சிவசிதம்பரம், அவரது பாரியார் வவுனியா மாவட்ட அமைச்சர் திரு. ஜி டி மகிந்த சோமா அவரது பாரியார், ஐ தே. க வவுனியா அமைப்பாளர் திரு கே ரி புலேந்திரன், வவுனியா அரசாங்க அதிபர் திரு கே. சி லோகேஸ்வரன் மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு எம் சிற்றம்பலம் உட்பட பலர் மேளதாள வாத்தியங்களுடன் கோலாட்டம், கும்மி நடன நிகழ்ச்சிகள் முன் செல்ல ஊர்வலமாக கச்சேரி முன்றலில் அமைக்கப்பட்ட விசேட மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.

இரு பெரும் இனங்களின் கலாச்சார கண்டிய வாத்தியம் முழங்க வவனியா மாவட்ட அமைச்சர் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார்.

நாதஸ்வர வாத்தியம் முழங்க மக்கள் கரகோஷத்தின் மத்தியில் வவுனியா மாவட்ட அபிவிருத்தி சபையின் தலைவர், வவனியா மாவட்டக்கொடியை ஏற்றி வைத்தார்.

சிலை திறப்பு விழாவின் நிகழ்ச்சிகளை மக்கள் கண்டுகொள்ள வசதியாக வவனியா நகரின் பிரதான வீதிகள் வாகனப் போக்குவரத்திற்கு மூடப்பட்டு இருந்தது. பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு இருந்தது. அத்துடன் தொண்டர் படையினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

விழாவை ஒட்டி நகரின் பல பாகங்களிலிருந்தும்பெரும் திரளான மக்கள் வவுனியா நகருக்கு வந்தவண்ணம் உள்ளனர்

நகரசபை மைதானம் பல வண்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டுள்ளது. ஏறக்குறைய 15 ஆயிரம் மின் விளக்குகள் இந்த அலங்காரத்துக்காகப் பாவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

வன்னி மண்ணில் புத்தெழுச்சியும், தமிழ் உணர்வும் பொங்கி எழுகின்றது.

## விளையாட்டு மைதானம் கிடைக்கும்

(புலோலி)

புலோலி கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்குப்புதிய விளையாட்டு மைதானமொன்று கிடைக்கவுள்ளது

இப் பாடசாலையின் விளையாட்டு மைதானத்திற் கெனப் பருத்தித்துறை எம். பி. திரு கே. துரைரத்தினம் பன்முகப் படுத்தப் பட்ட வரவு செலவுத்திட்டத்தில் 15,000 ரூபாவை ஒதிக்கீடு செய்திருந்தார்.

[அ]

## சுவர்ணமுகி---

(1ம் பக்சத் தொடர்ச்சி)

தமிழக ஆஸ்தான நர்த்தகி குமாரி சுவர்ணமுகியை யாழ் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம் இன்று பாராட்டிக் கௌரவிக்கவுள்ளது.

குமாரி சுவர்ணமுகியின் தந்தையாரின் சீடரான திரு. அ. தங்கராசாவின் நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் இப் பாராட்டுவிழா நடைபெறவுள்ளது,

யாழ், பொது சன நூலக கட்டிட நிதிக்காக கொழும்பிலும், யாழ். நகரிலும் நடன நிகழ்ச்சிகளில்கலந்து கொள்ள கொழும்புக்கு குமாரி சுவர்ணமுகி வந்துள்ளார்.

யாழ். நூலகநிதிக்காகநடைபெறும் இவரது நடன நிகழ்ச்சிகள் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

### நாளை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

நாளை திங்கட்கிழமை மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் குமாரி சுவர்ணமுகியின் நடன நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. (மா)

## அரசு உரிய---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நமது மண்ணையும், மக்களையும் பாதுகாத்து யாருக்கும் அடங்காத வீர உணர்ச்சியோடு விடுதலை பெற்று வாழ வேண்டிய கட்டுப்பாடான உணர்ச்சியை இவ்விழா ஈழத் தமிழ் மக்களுக்கு ஊட்டும் என்பது திண்ணம்.

''அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி மக்களின் விடுதலைக்காக உழைத்த வீரர்களின் வரிசையில் அடங்காப்பற்றுமிக்க வீரனாக விளங்கியவன் மாபெரும் வீரன் பண்டாரவன்னியன்.

''இவன் வரலாற்றில் சிறப்பான இடத்தை ... டிய பெருமைமிக்கவன். காலத்திற்குக் காலம் தமிழ் மக்களின் உணர்ச்சியிலிருந்து சில நாடகங்களாகவும், கதைகளாகவும் கிராம மட்டத்தில் பெரு விழாக்கள் மூலம் பண்டார வன்னியன் நினைவு கூரப்பட்டது'' என்றார்.

வவனியா அரசாங்க அதிபர் திரு. கே. சி. லோகேஸ்வரன் இவ்விழாவில் வரவேற்புரை நிகழ்த்தினார். [வெ]

## தமிழ்மக்கள்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மடுவிலுள்ள ஞாபகக்கல் பொறிக்கப்பட்டதிலும் பார்க்க இச்சிலை திறப்புவிழாவினால் என்றும் மாவீரனுடைய சிந்தனை உணர்வு நின்று நிலைக்கும்.

''வெள்ளையரும், ஒல்லாந்தரும், பிரஞ்சுக்காரரும் இம் மண்ணையார் எடுப்பது என்று போட்டியிடும் பின்னர் வன்னி நாட்டை அவர்களால் பிடிக்க முடியவில்லை. அந்த மாவீரக்கிருந்த வீரமும் வேகமும் தன்மான உணர்வும் தமிழ் மக்கள் மத்தியில் பொங்க வேண்டுமென்பதே எனது அவா'' என்றார்,

இந்த வைபவத்தில் சபாநாயகர்அல்ஹாஜ் எம்,பாக்கீர் மாக்கார், வவனியா மாவட்ட அமைச்சர் திரு. ஜி. டி. மகிந்த சோமா ஆகியோரும் உரையாற்றினர்.

பண்டாரவன்னியன் மலரை தமிழக சட்டசபை சபாநாயகர் திரு.கே. இராசாராம் சபாநாயகர் அல்ஹாஜ் எம். ஏ பாக்கீர் மாக்காருக்கு முதல் பிரதியை வழங்கி விழாமலர் வெளியீட்டை ஆரம்பித்து வைத்தார்.



பண்டத்தரிப்புப் பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தினர் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்த போது எடுத்த படம்.

## பக்கத்தில் இரத்தக்கறையுடன்...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

டத்தரணி ஜிம்மி இராஜரெட்ணம் ஆஜராகிஇருந்தார். எதிரிகள் சார்பில் திரு. நல்லைநாதன், செல்வி தேவி இராயப்பு ஆயோரின் அனுசரணையுடன் சட்டத்தரணி ந. ஸ்ரீகாந்தா ஆஜரானார்.

சாட்சி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியவதாவது; இறந்தவர் எனது தாய்மாமனார். மாமா எங்களுடன்தான் இருக்கின்றார். இவர் தினமும் காலையிலும் மாலையிலும் கள்ளுத் தவறணைக்குப் போய் கள் குடித்துவிட்டுதான் வீட்டிர்கு வருவார். வீட்டுக்கு வந்தபின் வீட்டில் உள்ள ஒருவருடனும் பிரச்னைப்படுவதில்லை, எனது கிராமத்திலோ அல்லது அயலிலோ அவருக்கு ஒரு பிரச்னையும் கிடையாது. அவர் ஒருவருடனும் சண்டை பிடித்ததும் கிடடயாது. இவர் 1982ம் ஆண்டு மாசி மாதம் 2-ம் திகதி பின்னேரம் கள்ளுத் தவறணைக்குப் போகும் போது நான் வீட்டில் இருக்கவில்லை. இவர் கள்ளுத் தவறணைக்குப் போனால் இரவு எட்டு எட்டரை மணிபோல் தான் வீட்டுக்கு வருவார். அன்று சாயந்தரம் நான் அயலில் உள்ள முருகன் கோவிலுக்குக் கார்த்திகைத் திருவிழாவுக்குப் போனேன். கோவில் எனது வீட்டில் இருந்து 100, 150யார் தொலைவில் இருக்கின்றது நான் அன்று இரவு பத்துமணி போல் கோவிலில் நிற்கும் போது எனது அம்மா அன்னம்மா வந்து மாமா இன்னும் வீட்டுக்கு வரவில்லை என்றும் அவரைப்போய் பார்த்துவரும் படியும் கூறினார். நான் எனது பைசிக்கிள் வண்டியில், டோர்ச்லைட்டுடன் போனேன். ரோட்டால் கள்ளுத் தவறணைக்குப் போனேன் பின் அவர் வழக்கமாக வரும் குறுக்குப்பாதையால் ரோச்லைட் அடித்துப் பார்த்துக் கொண்டு வரும்போதுஇரண்டு பனைகளுக்கிடையில் ஒரு பனம் காணிக்குள் அவரது சடலம் கிடந்தது. மாமா பக்கவாட்டாக மேலபார்த்தபடி கிடந்தார். அவருக்குப் பக்கத்தில் சுமார்20ருத்தல் மதிக்கக்கூடிய இரத்தக் கறையுடன் ஒருகல் மாமாவின் தலைக்குக் கிட்டக் கிடந்தது. நான் மாமாவைக் கண்டபோது மாமாஉயிருடன் இருக்கவில்லை. அவர் இறந்து கிடந்தார். சடலத்தின் வலது பக்க முகத்தில் காயம் இருந்தது நான் அந்த இடத்தில் நின்று குழறினேன். சத்தத்தைக்கேட்டு அயலவர்கள் வந்தார்கள்.

சாட்சியின் தாயார் இரத்தினம் அன்னம்மா சாட்சியமளிக்கையில கூறியதாவது: ''இறந்தவர் எனது அண்ணன். இவர் விவாகம் செய்யவில்லை. 30, 35 வருடங்களாக இவர் எங்களுடன் தான் இருந்து வருகின்றார். இவர் வழமைபோல் கள்ளுத்தவறணையில் இருந்து வராமையினால் நான் அயலில் உள்ள முருகன் கோவிலில் நின்ற எனது மகனிடம் மாமாவைப்பார்த்து வரும்படி கூறினேன். அப்போதுமகன் ரோச்லைட் எடுத்துக்கொண்டு போய் பார்த்துவிட்டு மாமா மோசம் போய்க்கிடக்கிறார் என்று குழறிக்கொண்டு வந்து சொன்னார். மரணவிசாரணையின் போது நான் அவரை அடையாளம் காட்டினேன்'' என்றார்.

## சபாநாயகர் சிலைக்கு மாலை சூட்டினார்

[வவுனியா]

வவுனியாவில் நடைபெறும் பண்டாரவன்னியன் சிலை திறப்புவிழா முத்தமிழ் விழாக்களில் கலந்து கொள்ள இந்தியாவிலிருந்து தமிழ்நாடு சட்டசபை சபாநாயகர் திரு.ராஜாராம், கலாநிதி ஔவைநடராஜன், எம். பகீரதன், சினிமா நடிகர் விஜயகுமார் மஞ்சுளா தம்பதிகள் வந்துள்ளனர்.

இவர்கள் பண்டார வன்னியன் சிலைக்குமலரஞ்சலிசெலுத்தினர்.

சபாநாயகர் திரு. ராஜாராம் தமிழ் நாட்டிலிருந்து கொண்டுவந்த நீல நிற மாலையை பண்டாரவன்னியன் சிலைக்கு அணிவித்தார். (மா

இதே மேடையில் வைத்து பண்டாரவன்னியன் நாடக நூலாசிரியர் வே. சுப்பிரமணியத்துக்கு வவனியா எம். பி, திரு, தா. சிவசிதம்பரம் பொன்னாடைபோர்த்திக் கௌரவித்தார்.

நடனச்சுடர் செல்வி ரங்கா விவேகானந்தன் நடனம், முன்னியவை இயல் இசை கலா மன்றம் அளித்த பண்டார வன்னியன் நாடகம் இடம் பெற்றது.

விழா முடிவடையும் வரை பெருந்திரளான மக்கள்மைதானத்தில் குழுமியிருந்தனர். (க)


## சுபிட்சத்திற்கு வழிகாட்டி

நம்பிக்கை - நாணயம் - அநுபவம்
உங்கள் முதலீட்டிற்கு இவை உத்தரவாதம்

**SHABRA UNICO FINANCE LTD.**

நிதி ரீதியான உதவிகள்:

1. உங்களுக்கு வர்த்தக ரீதியிலும், விவசாயத்துறை ரீதியிலும், வாகனங்களை, உபகரணங்களை கொள்வனவு செய்ய உதவும் விதமாக வாடகை கொள்வனவு நிதி உதவி வழங்கப்படும்.
2. வீடமைப்பு, விவசாயம், கைத்தொழில், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் ஆகியவற்றிற்கு நிதி ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படும்.
3. நீங்கள் விற்கவிருக்கும் காணிகள் வீடு வளவுகள் ஆகியவற்றை சிரமமின்றி நல்ல விலைக்கு விற்றுத் தருவோம்.

வேறும் பல தேவைகள் எதுவானாலும் கலந்து ஆலோசிக்க எம்மிடம் வாருங்கள்

**SHABRA UNICO FINANCE LIMITED**

(இலங்கை மத்தியவங்கியின் அனுமதி பெற்ற ஸ்தாபனம்)

அலுவலகம்
61, நியூ புலர்ஸ் வீதி,
கொழும்பு - 4

Tel:- 589310


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஜூலை மீ 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Tleegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.